

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 45 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 06 – சனிக்கிழமை 23 செப்டம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 45: Thiruvalluvar Year - 2054 - Purattasi 06 - Saturday 23 September 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தால்

# கிராமப்புறங்களில் பணப்புழக்கம் அதிகரிப்பு!

## அனைத்துத் தரப்பினரும் பாராட்டு! முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி!

**சென்னை, செப். 23-**

**சென்னை - தலைமைச் செயலகத்தில், நேற்று காலை, மாநில திட்டக் குழுவின் 4வது கூட்டத்திற்குத் தலைமையேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தால் கிராமப்புறங்களில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது” என்றும் “இத்திட்டத்தை அனைத்துத் தரப்பினரும் பாராட்டுகின்றனர்” என்றும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சரும், மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.9.2023) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மாநிலத் திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு கொள்கைகள், தயாரிக்கப்பட்டு வரும் கொள்கைகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்களான மகளிருக்கான இலவச நகர பேருந்து பயணத் திட்டமான விடியல் பயணம், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் ஆகியவற்றின் பயன்கள் மகளிர், மாணவர்கள் மற்றும் பொதுமக்களை சென்றடைந்தது தொடர்பான ஆய்வு முடிவுகள் குறித்தும் விளக்கப்பட்டன.

மேலும், மாநிலத் திட்டக் குழுவால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகள், நடத்தப்பட்ட பயிலரங்கங்கள், நடப்பில் உள்ள ஆய்வுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டன.

மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள் மூன்றாவது திட்டக் குழு கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகளின்படி, மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் மாநிலத் திட்டக் குழுவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பற்றி விவரித்தார்.

இம்மாநில திட்டக்குழு கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-



முதலமைச்சரும், மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.9.2023) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், நிதித்துறை செயலாளர் (செலவினம்) எஸ்.நாகராஜன், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் – பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் ம. விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், கே.தீனபந்து, (ஓய்வு), பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், மருத்துவர் கு.சிவராமன், முனைவர் நர்த்தகி நட்ராஜ், உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) திருமதி எஸ்.சுதா ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழக ஆட்சியின் கொள்கை வகுப்புக்கு அடித்தளமாக இருக்கிற திட்டக் குழுவினருடன் கலந்துரையாடல் நடத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களோடு உரையாடுவது எனக்கு மனநிறைவாகவும் இருக்கிறது. ஏன், வழிகாட்டுவதாகவும் அமைந்திருக்கிறது.

இந்த ஆட்சி செல்ல வேண்டிய பாதையையும், செல்லும் பாதை சரியானது தானா? என்பதையும் அறிவுறுத்தும் அமைப்பாக திட்டக்குழு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காக திட்டக்குழு துணை தலைவர் ஜெயரஞ்சன் அவர்களுக்கும், திட்டக்குழுவின் முழு நேர மற்றும் பகுதி நேர உறுப்பினர்களுக்கும், என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **முகநூலில் ஒருவர் எழுதி இருக்கிறார். “எங்கள் கிராமத்தில் 300 பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் வந்துள்ளது. அப்படியானால் எங்கள் கிராமத்திற்குள் 3 லட்சம் ரூபாய் வந்துள்ளது. 3 லட்சம் ரூபாய் எங்கள் கிராமத்திற்குள் வந்திருப்பதன் மூலமாக எங்கள் கிராமத்தில் பணப்புழக்கம் அதிகமாகி இருக்கிறது. எங்கள் கிராமத்து வளர்ச்சிக்காக 3 லட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது” என்று அவர் எழுதி இருக்கிறார்.**

### கொள்கைகளை வகுக்கும் முக்கியமான பணி!

அதிலும் குறிப்பாக ஜெயரஞ்சன் அவர்கள், அரசின் வழிகாட்டிகளில் ஒருவராகச் செயல்பட்டு வருகிறார். முக்கிய கொள்கைகளை வகுப்பதற்கு முனைப்புடன் வழிகாட்டுதல் வழங்குகிறீர்கள். முக்கியத் திட்டங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த துணை நிற்கிறீர்கள். அரசுக்கும் மக்களுக்கும் இடைவெளி ஏற்பட்டு விடாமல் - அனைவருக்கும் அனைத்தும் கிடைப்பதற்கு திட்டக்குழு சீர்மிகு பணியாற்றி வருகிறது என திட்டக் குழுவின் தலைவர் என்ற முறையில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

சில முக்கியமான கொள்கைகளை வகுக்கும் பணி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மின் வாகன கொள்கை,
- தொழில் 4.0 கொள்கை,
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை,
- துணி நூல் கொள்கை,
- கைத்தறிக் கொள்கை,
- சுற்றுலாக் கொள்கை
- தமிழ்நாடு மருத்துவ உரிமைக் கொள்கை
- தமிழ்நாடு பாலின மாறுபாடு உடையோருக்கான நலக் கொள்கை ஆகியவற்றைத் தயாரித்து நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள்.
- கழிவு மேலாண்மை கொள்கை,
- தமிழ்நாட்டின் நிலையான நிலப் பயன்பாட்டுக் கொள்கை,
- நீர்வள ஆதாரக் கொள்கை,
- வேலைவாய்ப்பு மற்றும் திறன் கொள்கை,
- வீட்டு வசதிக் கொள்கை

என்பன போன்றவற்றையும் விரைந்து இறுதி செய்திட வேண்டும் என்று எதிர் பார்க்கிறேன்.

### திட்டங்கள் மக்களுக்கு எந்த வகையில் பயனளிக்கிறது என்பது முக்கியம்!

நான் மிக முக்கியமாகக் கருதுவது அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மக்களுக்கு எந்த வகையில் பயனளித்து வருகிறது என்பது தொடர்பாக நீங்கள் தரும் ஆய்வறிக்கைகள்தான்.

- மகளிருக்கு இலவச விடியல் பயணத் திட்டத்தை நாம் நிறைவேற்றினோம். இந்த திட்டத்தின் மூலமாக பெண்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மாற்றங்கள், உயர்வுகள் என்னென்ன என்பதை திட்டக் குழு அறிக்கையாகக் கொடுத்த பிறகு தான் அந்த திட்டத்தின் விரிந்த பொருள் அனைவரையும் சென்றடைந்தது. மாதம் தோறும் 800 ரூபாய் முதல் 1200 வரை சேமிக்கிறார்கள் என்பதைவிட பெண்களுக்கு பொருளாதார

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

உச்ச நீதிமன்றத்தில் போராடி தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம்!

# காவிரிப் பிரச்சினையில் கர்நாடகாவுடன் பேச்சுவார்த்தை என்பதே கிடையாது!

## அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**சென்னை, செப். 23-**

**காவிரி நீர் குறித்து உச்ச நீதிமன்றத்தில் போராடி தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம். இனி காவிரி தொடர்பாக கர்நாடக அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டியளித்துள்ளார்.**

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் கோட்டூர்புரத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: உச்ச நீதிமன்றம் தீர்ப்பால் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த நீரை வைத்துக் கொண்டு குறுவை பாசனத்தை பழுது இல்லாமல் காப்பாற்றலாம் என கருதுகிறோம்.

காவிரியில் உரிய நீரை திறக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பை கர்நாடகா அரசு அமல்படுத்த வேண்டும். தீர்ப்பை அமல்படுத்தாவிட்டால் நீதிமன்ற அவமதிப்புக்கு கர்நாடக அரசு ஆளாக நேரிடும். விநாடிக்கு 5,000 கன அடி நீரை 15 நாட்களுக்கு திறக்க கர்நாடகாவுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.



தண்ணீர் திறந்து விட்டதும் தமிழகம் வந்துவிடாது. பிலிகுண்டுலு வருவதற்கே மூன்று நாட்கள் ஆகும். அவர்களுக்குரிய தண்ணீரை கேட்பதாக அங்குள்ள கர்நாடகாவிவசாயிகள்தவறாகநினைக்கிறார்கள். காவிரி ஆற்று நீர் கர்நாடகத்திற்கு மட்டுமல்ல. கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகி, அந்த மாநிலத்தைவிட தமிழகத்தில் தான் அதிக இடங்களில் ஓடுகிறது. ஆற்றின் கடைமடை பகுதிக்குத்தான் அதிக உரிமை உண்டு.

ஆகவே, கர்நாடகத்தில் உள்ள விவசாயிகளுக்கும் தண்ணீர் வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. தண்ணீர் மிகையாக இருக்கும் காலத்தில் இந்த பிரச்சினை இல்லை. கண்ணை மூடி திறந்து விடுவார்கள். தற்போதைய நிலையில் எவ்வளவு தண்ணீர் இருந்தாலும், தமிழகத்திற்கு பங்கிட்டு கொடுக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் அருமையாக தெரிவித்து இருக்கிறது.

ஆணைய உத்தரவின்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டிய கட்டாயத்தில் கர்நாடகா உள்ளது. சட்டரீதியாக சென்று கொண்டிருக்கும்போது பேச்சுவார்த்தை நடத்துவது சரியாக இருக்காது.

பேச்சுவார்த்தை என்பது இனிமேல் இல்லை. பேச்சுவார்த்தைக்கு போனால் நமது கோரிக்கைகளை மழுங்கடித்து விடுவார்கள். இனிமேல் அனைத்துக் கட்சி கூட்டம் தேவையில்லை.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேட்டி அளித்தார்.

---

இது உங்களுக்கான உதவித்தொகை அல்ல உரிமைத்தொகை!

# உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத் தொகை!

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளான 1 கோடியே 6 லட்சம் மகளிருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, செப். 23-**

**உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத்தொகை என்றும், இது உங்களுக்கான உதவித்தொகை அல்ல உரிமைத் தொகை என்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளான ஒரு கோடியே 6 லட்சம் மகளிர்க்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித்தனியே கடிதம் எழுதியுள்ளார்.**

**இது குறித்து முதல்வர் அவர்களின் கடிதம் வருமாறு:-**

“தங்களது அன்புக் கட்டளையால் தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்ற உங்களின் அன்பு உடன்பிறப்பு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களுக்கு எழுதும் கடிதம்.

பேருந்தில் மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம், அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலக் கல்லூரிக்கு வரும் புதுமைப் பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, நகைக்கடன் ரத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள், புதிய மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கம் என மகளிருக்கு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருவது ‘திராவிட மாடல்’ அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள். மகளிர் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை இத் திட்டங்கள் உருவாக்கி உள்ளன.

இந்த வரிசையில் மற்றுமொரு மாபெரும் திட்டம்தான் தேர்தலுக்கு முன்னதாக நாங்கள் அளித்த வாக்குறுதிகளில் மிகமிக முக்கியமான ‘மகளிர் உரிமைத் திட்டம்’. இந்தத் திட்டத்தின் பயனாளியாகத் தகுதியின் அடிப்படையில் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளீர்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி மாதம்தோறும், ஆயிரம் ரூபாய் தங்களின் வங்கிக் கணக்கில் தமிழ்நாடு அரசால் நேரடியாக வரவு வைக்கப்படும். பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், அவரது தாய், சகோதரி, மனைவி, மகள் எனப் பெண்களின் பல மணிநேர உழைப்பு இருக்கிறது. இப்படி கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்புக்குத் தரப்படும் அங்கீகாரமே இத்தொகையாகும். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கி, உள்ளாட்சி அமைப்புகளிலும் பணியிடங்களிலும் இடஒதுக்கீடு வழங்கிய மகளிர் முன்னேற்ற மாண்பாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்படுவதால், ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது உங்களுக்கான உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை. உங்களில் ஒருவனான ஸ்டாலின் வழங்கும் உழைப்புத் தொகை.

உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்!”

இவ்வாறு முதல்வர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதம் அனைவருக்கும் ‘ஸ்பீட் போஸ்ட்’ மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 23-09-2023

# பெண்களை ஏமாற்றிய பா.ஜ.க.

நாடாளுமன்ற - சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றிவிட்டதாக பெருமை பொங்கச் சொல்லிக் கொள்கிறது பா.ஜ.க. ஆனால், அது உண்மையில் பா.ஜ.க.வின் கபட நாடகம்தான்!

அடுத்து நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலேயே 33 விழுக்காடு என்று சொல்லி இருந்தாலாவது பரவாயில்லை. 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வருவோம் என்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. 2024 ஆம் ஆண்டு மே மாதம் பதவியில் இருந்து இறங்கப் போகும் அவர்தான் 2029 ஆம் ஆண்டுக்கான ஆரூடத்தைச் சொல்கிறார்.

**‘திவாலான வங்கியின் பின்தேதியிட்ட காசோலை இது’ என்று தி.மு.க. எம்.பி., தமிழச்சி தங்கப்பாண்டியன் நாடாளுமன்றத்திலேயே சொல்லி இருக்கிறார். ‘பேங்க்’ உதாரணம் சொன்னால்தான் பா.ஜ.க.வுக்குப் புரியும் என்பதால்; இந்த உதாரணத்தைச் சொல்லி இருக்கலாம்.**

2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிய வேண்டும். அதன் பிறகு புதிய அரசு பொறுப்பேற்கும். அந்த அரசு, புதிதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவார்களாம். அதன் முடிவுகள் இறுதி செய்யப்படும். அதை வைத்து தொகுதி எல்லை வரையறைகள் செய்யும். அந்தத் தொகுதிகளில் எது பெண்களுக்கு என்பதை அப்புறமாக முடிவு செய்வார்கள். இதெல்லாம் நடக்க பத்து ஆண்டுகள் ஆகலாம். அதற்கு மேலும் ஆகலாம்.

2021 ஆம் ஆண்டு நடத்த வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பையே இன்னும் நடத்தவில்லை. இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பே 2027 அல்லது 2028-ஆம் ஆண்டில் நடக்கலாம் என்று தகவல் சொல்கிறார்கள். இதுவும் அதிகாரப்பூர்வமாக அல்ல!

“பெண்கள் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படுவது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கும்” என்று உள்துறை அமைச்சர் சொல்லி இருக்கிறார். புதிய சகாப்தம் என்பது பத்து ஆண்டுகளுக்குப் பின்னால்தான் தொடங்க இருக்கிறது. இப்போது என்னவாம்?

**2014 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. வந்ததும் ஏன் இதனைக் கொண்டு வரவில்லை? “2016-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி மகளிர் நாள் அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்து பெண் எம்.பி.கள் அனைவரும் சேர்ந்து இதற்காகக் குரல் கொடுத்தார்கள். ‘33 விழுக்காடு இடஒதுக்கீடு என்ன ஆனது?’ என்று கேட்டார்கள். அப்போது பா.ஜ.க. அரசு வாய் திறக்கவில்லை. வாய் திறக்க ஏழு ஆண்டுகள் ஆகி இருக்கிறது. பெண்கள் சமுதாயத்தின் மீது உண்மையான அக்கறையில் இந்த மசோதாவைக் கொண்டுவரவில்லை என்பது இதன்மூலம் தெரியவில்லையா?” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி உள்ள கேள்விக்கு பா.ஜ.க.வின் பதில் என்ன?**

“சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்புச் சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய அக்கறையில் 100-ல் 1 விழுக்காடு கூட மகளிர் மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு காண்பிக்காதது ஏன்?” என்றும் முதலமைச்சர் அவர்கள் கேட்டார்களே, பா.ஜ.க.வின் பதில் என்ன?

**2014-ஆம் ஆண்டும், 2019-ஆம் ஆண்டும் நடந்த தேர்தல்களில் பெரும்பான்மையைப் பெற்றது பா.ஜ.க அரசு. நினைத்திருந்தால் அவர்கள் அதனை உடனடியாக நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை? ஆட்சி முடியும்போது ஏன் கொண்டு வருகிறார்கள்? நாம்தான் இனி வரப்போவதில்லையே என்பதாலா?**

33 விழுக்காடு வழங்கும் சட்டத்தை இன்று கொண்டு வந்தாலும், அதனை எதிர்க்கும் ‘யோகி’களும் பா.ஜ.க.வுக்கு உள்ளே இருக்கத்தான் செய்கிறார்கள். ‘பெண்களைப் பாதுகாக்க வேண்டும், சுதந்திரம் தரக்கூடாது’ என்ற அரிய தத்துவம் சொன்னவர் யோகி ஆதித்யநாத். 2010 ஆம் ஆண்டு பெண்கள் இடஒதுக்கீடுச் சட்டத்தை எதிர்த்த பா.ஜ.க. உறுப்பினர்களில் அவர் முக்கியமானவர். 2014 ஆம் ஆண்டு தனது இணையத் தளத்திலும் எதிர்த்து எழுதி இருக்கிறார். ‘இத்தகைய சக்திகளால்தான் 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்பது மாதிரியான விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

33 விழுக்காடு வழங்கும் சட்டத்தை அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ளன. அதேநேரத்தில் பா.ஜ.க.வின் கபட நாடகத்தை அனைத்துக் கட்சிகளும் கண்டித்தும் உள்ளன. விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்கள், ‘சட்டத்தை ஆதரிக்கிறோம். சட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்கும் தடைகள் சட்டத்திலேயே உள்ளன. அதனை எடுங்கள்’ என்று குறிப்பிட்டார்கள். ‘2010 ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்ட போது எந்த நிபந்தனையும் விதிக்கப் படவில்லை. நிறைவேற்றப்பட்டதும் அமலாகும் என்று சொல்லப்பட்டது. நீங்கள் நிபந்தனைகள்தான் அதிகம் போட்டுள்ளீர்கள்.’ என்று குற்றம் சாட்டினார் தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி. ‘2029 நடைமுறைக்கு வரும் இடஒதுக்கீட்டுக்கு இப்போது சட்டம் இயற்றும் விசித்திரம் பா.ஜ.க.வால் அரங்கேற்றப்படுகிறது’ என்றும் அவர் சொன்னார்.

‘மகளிர் மசோதா என்று சொல்வதற்குப் பதிலாக மகளிர் இடஒதுக்கீடு மறுசீரமைப்பு என்றே சொல்ல வேண்டும்’ என்றார் திரிணாமூல் காங்கிரஸ் மஹுவா மொய்த்ரா. ‘பதவிக்காலம் முடியும் போது கொண்டு வருவதுதான் தந்திரம்’ என்றார் அகாலி தளம் ஹர்சிம்ரத் கவுர். எனவே, பா.ஜ.க.வின் கபடநாடகம் நாடாளுமன்றத்திலேயே பதிவாகி விட்டது.

“பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவை முன் வைப்பதற்கான ஐந்தாவது முயற்சி இதுவாகும். இந்த நாடாளுமன்றத்தால் பெண்கள் நான்குமுறை ஏமாற்றம் அடைந்துள்ளனர்” என்று சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர்.

ஐந்தாவது முறையும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்பதுதான் உண்மை!

●●

நெல்லையைத் தொடர்ந்து

## சென்னை-விஜயவாடா வந்தே பாரத் ரயில் சேவை!

*சென்னை,செப்.23-*

*நெல்லையைத் தொடர்ந்து விஜயவாடாவிற்கும் செப்டம்பர் 24ஆம் தேதி (நாளை) வந்தே பாரத் ரயில் இயக்கப்பட உள்ளது.*

*இதனை பிரதமர் மோடி காணொலிக் காட்சி மூலம் தொடங்கிவைக்கிறார். மேலும் விஜயவாடாவில் நடக்கும் தொடக்கவிழாவில் ஆந்திர முதல் ஜெகன் மோகன் ரெட்டி, ஆளுநர் அப்துல் நசீர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இதையொட்டி விஜயவாடாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*சென்னைவிஜயவாடா வந்தே பாரத் ரயிலை செவ்வாய்க்கிழமை தவிர வாரத்தில் 6 நாட்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை சென்ட்ரலில் இருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு மதியம் 12.10 மணிக்கு விஜயவாடா சென்றடையும்.*

*அதேபோல் விஜயவாடாவில் இருந்து பகல் 3.20 மணிக்கு புறப்பட்டு இரவு 10.40 மணிக்கு ரயில் சென்னை வந்தடையும். இந்த ரயில் சென்னைவிஜயவாடா இடையே ரேணிகுண்டா, நெல்லூர், ஓங்கோல் மற்றும் தெனாலி ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என ரயில்வே துறை தெரிவித்துள்ளது.*

உறக்க நிலையில்

## சந்திரயான்-3 லேண்டர், ரோவர்!



*பெங்களூரு,செப்.23-*

*திட்டமிட்டபடி நிலவின் தென்துருவத்தில் சந்திரயான் 3 விண்கலத்தை இஸ்ரோ வெற்றிகரமாக தரையிறக்கியது. இதன் மூலம் நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.*

*தென் துருவப் பகுதியில் இரவு சூழல் வந்துவிட்டதால் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் உறக்க நிலையில் வைக்கப்பட்டது.*

*தற்போது நிலவில் சூரிய ஒளி மீண்டும் வருவதால் லேண்டர், ரோவர் கலன்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது.*

*நிலவில் வெப்பநிலை மைனஸ் 120200 டிகிரி செல்சியஸ் வரை செல்லும் என்பதால் லேண்டர் மற்றும் ரோவரை ஸ்லீப் மோடில் வைத்துள்ளோம். செப்டம்பர் 20 முதல், நிலவில் சூரிய உதயம் நடைபெறும் என்பதால் சோலார் பேனல் மூலம் முழுமையாக சார்ஜ் செய்யப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.*

*எனவே லேண்டர் மற்றும் ரோவர் இரண்டையும் மீண்டும் தொடர்பு கொள்ள முயற்சிப்போம் என்று இஸ்ரோவின் விண்வெளி பயன்பாட்டு மைய இயக்குனர் நிலேஷ் தேசாய் பிடிஐயிடம் தெரிவித்தார்.*

*அதன்படி, ரோவர் பிரக்யான் மற்றும் லேண்டர் விக்ரம் ஆகியவற்றுடன் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முயற்சிகளை மேற்கொண்டதில், இது வரை எந்த சிக்னலும் கிடைக்கப் பெறவில்லை என்றும், அதனை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது.*






### துருக்கியில் சிகிச்சை பெற்று வரும் 2 வயது சிறுமி

# ஏர் ஆம்புலன்ஸ் மூலம் சென்னைக்குக் கொண்டு வர ரூ.10 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதித்து உத்தரவு!

**சென்னை, செப். 22-**

**உடல் நலக்குறைவால் துருக்கி நாட்டில் சிகிச்சை பெற்றுவரும் 2 வயது குழந்தையை சென்னைக்கு ஏர்ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவர ரூபாய் பத்து இலட்சம் அனுமதித்து - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

கடந்த 07.09.2023 அன்று தமிழ்நாடு, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ் என்பவர் தனது 2 வயது பெண் குழந்தையுடன் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து கொண்டிருந்த போது நடுவானில் அவரது இரண்டு வயது பெண் குழந்தை சந்தியாவிற்கு கடுமையான உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அவசரமாக துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் விமானம் தரையிறக்கப்பட்டது.

அங்கு "இஸ்தான்புல் மெடிக்கானா மருத்துவமனை"யில்குழந்தை சந்தியா அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவசர மற்றும் தீவிர சிகிச்சையின் பொருட்டு அவர்களின் மொத்த கையிருப்பு பணமும் செலவழிந்த நிலையில் மேல் சிகிச்சை செய்திட தமிழ்நாடு கொண்டுவர மருத்துவரிடம் ஆலோசனை பெறப்பட்ட நிலையில் குழந்தை சந்தியாவிற்கு கடுமையான சுவாச பிரச்சினை இருப்பதால், மருத்துவக் குழுவின் கண்காணிப்பில், சுவாச கருவி களுடன் விமானத்தில் பயணம் மேற்கொள்ள மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இஸ்தான்புல் நகரிலிருந்து மேற்காணும் மருத்துவ வசதிகளுடன் குழந்தை சந்தியாவை தமிழ்நாடு அழைத்து வர தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பெற்றோர் கோரிக்கை வைத்தனர்.

அக்கோரிக்கையினை தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து முதலமைச்சர் அவர்கள், சந்தியாவினை மேல்சிகிச்சைக்கு சென்னைக்கு அழைத்து வர ரூபாய் 10 இலட்சம் அளித்து உத்தரவிட்டுள்ளார். தற்போது அயலகத் தமிழர் நலத்துறை வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சென்னை அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தொன்மையான 237 திருக்கோயில்களில்

# திருப்பணிகள் தொடங்க மாநில வல்லுநர் குழு ஒப்புதல்!

*சென்னை, செப். 23-*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுரையின்படி, சென்னை, நுங்கம்பா க்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் திருப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிட மாதம் இரு முறை மாநில அளவிலான வல்லுநர் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன்படி நேற்று (22.09.2023) மாநில அளவிலான வல்லுநர் குழு கூட்டம் இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருவாரூர் மாவட்டம், நன்னிலம், கைலாசநாதர் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், வளவனூர், கோணம்மன் திருக்கோயில், செஞ்சி, ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, அய்யனார் திருக்கோயில், ஒரத்தநாடு, சுந்தரவிநாயகர் திருக்கோயில், புதுக் கோட்டை மாவட்டம், இலுப்பூர், ஈஸ்வரன் திருக்கோயில், ஆலங்குடி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி, செல்லாண்டியம்மன் திருக்கோயில், ஒட்டன்சத்திரம், கரிவரதராஜபெருமாள் திருக்கோயில், சேலம் மாவட்டம், ஓமலூர், வசந்தீஸ்வரர் திருக்கோயில், மேட்டூர், சக்தி பெரியமாரியம்மன் திருக்கோயில், கோவை மாவட்டம், சலீவன் வீதி, யோக ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், பொள்ளாச்சி, கருப்பராயசுவாமி திருக்கோயில், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், பகவதியம்மன் திருக்கோயில், பெருந்துறை, அத்தனூரம்மன் பொடராயசுவாமி திருக்கோயில், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம், லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில், மணவாசி, மத்தியபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் உச்சிமாகாளியம்மன் திருக்கோயில், காங்கயம், காசி விஸ்வநாதர் திருக்கோயில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், சோழைகாத்த அய்யனார் திருக்கோயில், காளையார்கோவில், காளியம்மன் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம், எருமைப்பட்டி, சித்தி விநாயகர் திருக்கோயில், திருவாடானை, மகாலிங்கசாமி திருக்கோயில் உள்ளிட்ட 237 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்குவதற்கு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. மாநில அளவிலான வல்லுநர் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் திருக்கோயில்களில் திருப்பணி களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடக்கப்படும்.

இக்கூட்டத்தில் ஆகம வல்லுநர்கள் சந்திரசேகர பட்டர், அனந்தசயன பட்டாச்சாரியார், அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த ஸ்தபதி முனைவர் கே.தட்சிணாமூர்த்தி, இராமமூர்த்தி தொல்லியல் துறை வடிவமைப்பாளர் முனைவர் டி.சத்தியமூர்த்தி, முனைவர் சீ.வசந்தி, கட்டமைப்பு வல்லுநர் கே.முத்துசாமி உட்பட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பெரம்பூர். ஆர்.மகேஷ் தலைமை! கலைஞர் நூற்றாண்டு விழா:

# சென்னை கிழக்கு மாவட்ட அயலக அணி சார்பில், சாலையோர வியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## கழக சட்டதிட்ட திருத்தக்குழு செயலாளர், இரா.கிரிராஜன், எம்.பி. வழங்குகிறார்

*சென்னை, செப். 23-*

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில், மாவட்ட அயலக அணி சார்பில் கலைஞர்-100, 38வது நிகழ்ச்சியாக "எளிய வியாபாரிகள் உயரவேண்டும்! இதயங்கள் கலைஞர் புகழ் உரைக்க வேண்டும்! எனும் தலைப்பில் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, பெரம்பூர், பெரவள்ளூர், மான்ட்போர்ட் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு சி.சி.வங்கி, தலைவரும், மாவட்ட அயலக அணி தலைவருமான பெரம்பூர்.ஆர். மகேஷ் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செ. தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, புனிதவதி எத்திராசன், லயன்.பி.உதயசங்கர் முன்னிலை வகிக்கின்றனர். தில்லை கதிரவன், புல்லட்.கி.ரமேஷ், ஆர்.ராஜன், புவனவதி, கிணார்.ஆறுமுகம், எஸ். புஷ்பராஜ், எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபாய், ஜி. கிருஷ்ண குமார், சே.மணிமாறன், வி.ஜெகநா தன், கே.என்.ஸ்வீட்பாபு, ஜெ.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் கழக சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளர், இரா.கிரிராஜன், எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மேலும், இவ்விழாவில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியாராஜன், அயலக அணித்தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி, எம்.பி., சட்டமன்ற உறுப்பினர், ப.தாயகம்கவி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், ஜோசப்சாமுவேல், சரிதா மகேஷ்குமார், பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார். பகுதி கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், சொ. வேலு, ஐ.சி.எப்.முரளிதன், எ.நாகராசன், வே.வாசு, டி.எஸ். பி.இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், பி.ஜெ. துளசிங்கம், சி.மகேஷ்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

71, 71அ வட்டகழக செயலாளர்கள் பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### தனியார் மருத்துவக் கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்பவே

# நீட் முதுநிலைத் தேர்வில் மதிப்பெண் பூஜ்யமாக குறைப்பு!

## தி.மு.க. மருத்துவரணிச் செயலாளர் எழிலன் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

*சென்னை, செப். 23-*

தனியார் மருத்துவக்கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்பவே முதுநிலை மருத்துவப் படிப்பில் கட் ஆஃப் மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டுள்ளதாக திமுக மருத்துவரணி செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் எழிலன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மருத்துவர் எழிலன், அனைத்துத் தேர்வுகளையும் ஒருங்கிணைத்தே முதுநிலை நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதாக ஒன்றிய அரசு கூறியதை நினைவு கூறினார்.

தற்போது முதுநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வில் ஜீரோ மதிப்பெண்கள் கிடைத்தாலே போதும் என்று தேசிய மருத்துவ ஆணையம் கூறுவது வேடிக்கையாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜீரோ பர்சன்டைல் என்பது பூஜ்ஜியம் மார்க்கைவிட குறைவு என்றும், தரமான மருத்துவர்கள் உருவாவதை தடுப்பதே நீட் தேர்வின் நோக்கமாக உள்ளதாகவும் மருத்துவர் எழிலன் குற்றம் சாட்டினார்.

ஒன்றிய அரசு 1,25,000 இடங்கள் காலியாக உள்ளதாக கூறுவது பொய் என்றும் இந்தியாவில் மருத்துவ மேற்படிப்பில் 65,000 இடங்கள் மட்டுமே காலியாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

நீட் தேர்வை எழுதினால் போதும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இனி சீட் கிடைத்துவிடும்; நீட் தேர்வு தரமான மருத்துவர்கள் உருவாவதற்கான தேர்வு இல்லை; தமிழ் வழியில் கல்வி படிப்பவர்களை மருத்துவம் படிக்க விடாமல் நீட் தேர்வு தடுப்பதாகவும் மருத்துவர் எழிலன் குற்றஞ்சாட்டினார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (22.09.2023) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை, சென்னை மற்றும் புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டு துணைத் தூதர் திருமதி லிஸ் டால்போட் பரே (Tmt.Lise Talbot Barre) சந்தித்து 07.10. 2023 தேதி நடைபெறும் கலாச்சார அமைப்பின் 70 வது ஆண்டு விழாவிற்கு அழைக்கவும், தமிழ்நாடு மற்றும் பிரான்ஸ் இடையேயான பொருளாதார மற்றும் கலைபண்பாடு குறித்து பேசினார். இந்நிகழ்வின் போது, தூதரகத்தின் துணைத் தூதர் புரோனோ குயென் (Thiru Bruno Nguyen), பிரான்ஸ் தூதரகத்தின் ஊடக மற்றும் மரபு அலுவலர் திருமதி விஜயசரஸ்வதி சிவ நாராயணன் உடனிருந்தார்.

# அனைத்துத் தரப்பினரும் பாராட்டு: முதல்வர் மகிழ்ச்சி!...

முதல் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரம் கிடைத்துள்ளது. சமூகத்தில் அவர்களது பங்களிப்பு அதிகமாகி இருக்கிறது. வேலைகளுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இதன் மூலமாக சமூக உற்பத்தியும் உழைப்பும் உற்பத்திக் கருவிகளும் அதிகமாகி இருக்கிறது. இவை பற்றி எல்லாம் ஆங்கில ஊடகங்கள் அதிகமாக எழுதத் தொடங்கியது.

❖ 'இல்லம் தேடிக் கல்வி' என்பது கல்வியை பரவலாக்கவும், சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் பள்ளிக்குள் கொண்டு வரவும் பயன்பட்டுள்ளது.

❖ 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டமானது அனைவருக்கும் சுகாதாரம் என்பதை உறுதி செய்துள்ளது. வீட்டுக்கே அரசு செல்கிறது என்ற நிர்வாகப் பரவலாக்கல் நடந்துள்ளது. மருத்துவ உரிமை நிலைநாட்டப்பட்டு உள்ளது.

**'நான் முதல்வன்' திட்டத்தை இன்னும் செழுமைப்படுத்தலாம்!**

❖ 'நான் முதல்வன்' திட்டமானது தமிழ்நாட்டு மாணவர்களை கல்வியில் அறிவாற்றலில் திறமையில் தன்னம்பிக்கையில் சிறந்தவர்களாக மாற்றி வருகிறது. பத்து லட்சம் பேருக்கு என்று சொன்னோம். ஆனால் 13 லட்சம் பேருக்கு இந்த ஆண்டு பயிற்சி வழங்கி இருக்கிறோம். மிகப் பெரிய பயிற்சி நிறுவனங்கள் மூலமாக பல்லாயிரக்கணக்கில் பணம் கட்டி அறிந்து கொள்ள வேண்டிய திறமைகளை அரசு கட்டணமின்றி வழங்கி வருகிறது.

இதன் மூலம் 1 லட்சத்து 74 ஆயிரத்து 183 மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் எப்படி செழுமைப்படுத்தலாம் என நீங்கள் பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

'விடியல் பயணம் திட்டம்', 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஆகியவை சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்தியது என நீங்கள் ஆய்வு செய்து அளித்த அறிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

அதேபோல, 'நான் முதல்வன்' திட்டத்தின் தாக்கம் குறித்தும் நீங்கள் அறிக்கை வழங்க வேண்டும். ஒவ்வொரு திட்டத்தின் பயன்பாடு என்பதும் மிகமிக அதிகம். செலவினத்தின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் அளவிடாமல், பயன்பாட்டின் அடிப்படையில் அளவிட வேண்டும் என்பதை திட்டக்குழு வழிகாட்டி வருகிறது. இது அரசு அதிகாரிகளுக்கும் மிகச் சிறந்த சிந்தனைத் திறப்பாக உள்ளது.

**ரூ.1000 உரிமைத் தொகை மகளிருக்கு மகிழ்ச்சியை வழங்கி வருகிறது!**

இப்போது மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம். ஒவ்வொரு மகளிருக்கும் ஆயிரம் ரூபாய் கிடைப்பது எத்தகைய மகிழ்ச்சியை வழங்கி வருகிறது என்பதை ஊடகங்களில் வரும் செய்திகள் மூலமாக அறிகிறேன். அனைத்து ஊடகங்களும் பெண்களிடம் பேட்டிகள் எடுத்து வெளியிட்டு வருகிறார்கள். பேட்டி அளிக்கும் அனைவரும் மகிழ்ச்சியுடன்தான் பேட்டி தருகிறார்கள்.

முகநூலில் ஒருவர் எழுதி இருக்கிறார். "எங்கள் கிராமத்தில் 300 பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் வந்துள்ளது. அப்படியானால் எங்கள் கிராமத்திற்குள் 3 லட்சம் ரூபாய் வந்துள்ளது. 3 லட்சம் ரூபாய் எங்கள் கிராமத்திற்குள் வந்திருப்பதன் மூலமாக எங்கள் கிராமத்தில் பணப்புழக்கம் அதிகமாகி இருக்கிறது. எங்கள் கிராமத்து வளர்ச்சிக்காக 3 லட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது" என்று அவர் எழுதி இருக்கிறார்.

கிராமப்புற ஆய்வில் ஆர்வம் கொண்ட துணைத் தலைவர் நம்முடைய ஜெயரஞ்சன் அவர்கள் இப்படி, பல கோணங்களிலும் ஆராய்ந்து 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' சமூகத்தில் ஏற்படுத்துகிற தாக்கம் குறித்து அறிக்கைகள் கொடுக்கலாம்.

மேலும், மிக முக்கியமான 2 வேண்டுகோள்களை உங்களிடம் வைக்க விரும்புகிறேன்.

❖ பொருளாதாரம் மற்றும் புள்ளியல் துறை இருக்கிறது. மதிப்பீடு மற்றும் ஆய்வுத் துறை இருக்கிறது. இவற்றையும் இணைத்துக் கொண்டு மாநில திட்டக்குழு செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைப்பு மிக மிக அவசியம்.

❖ பல்வேறு ஆலோசனைகளை நீங்கள் வழங்கி வருகிறீர்கள். இவற்றை அரசுத் துறைகள் முழுமையாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறதா, பின்பற்றுகிறதா என்ற ஆய்வையும் நீங்கள் செய்ய வேண்டும். புள்ளி விவரங்களாக மட்டுமல்ல கள ஆய்வுகளின் மூலமாகவும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், நிதித் துறை செயலாளர் (செலவினம்) எஸ். நாகராஜன், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் ம. விஜய பாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், கே. தீனபந்து, (ஓய்வு), பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், மருத்துவர் கு.சிவராமன், முனைவர் நர்த்தகி நட்ராஜ், உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) திருமதி எஸ். சுதா ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட

# செம்மஞ்சேரியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் டயாலிசிஸ் மையம்!

## மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

*சென்னை, செப்.23-*

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு 200ல் செம்மஞ்சேரி நகர்ப்புர ஆரம்ப சுகாதார நலமையத்தில் ரோட்டரி கிளப் ஆப் சென்னை அப்ஸ்கேல் சார்பில் ரூ.66.08 இலட்சம் மதிப்பீட்டில் 9 டயாலிசிஸ் இயந்திரங்கள் மற்றும் ரூ.53.92 இலட்சம் மதிப்பீட்டில் RO வடிப்பான்கள் மற்றும் பிற தேவையான துணைப் பொருட்கள் என மொத்தம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள டயாலிசிஸ் மையத்தினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (22.09.2023) மக்களின் மருத்துவ சேவை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த டயாலிசிஸ் மையத்தின் தொடர் செயல்பாடுகள் வொக்கார்ட் பவுண்டேசன் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த டயலிசிஸ் மையம் அமைப்பதற்கு உதவிய ரோட்டரி கிளப் ஆப் சென்னை அப்ஸ்கேல் மற்றும் வொக்கார்ட் பவுண்டேசன் நிர்வாகிகளை மேயர் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 16 நகர்ப்புர சமூக சுகாதார மையங்கள் (UCHC), 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் தொற்று நோய்கள் மருத்துவமனை ஆகியவற்றின் மூலம் சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஏழை மக்களின் நலனுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் 8 டயாலிசிஸ் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் மொத்தம் 92 டயாலிசிஸ் இயந்திரங்கள் செயல்படுகின்றன. இந்த மையங்களில் டயாலிசிஸ் இலவசமாக செய்யப்படுகிறது. தற்போது 568 பேர் டயாலிசிஸ் செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு 36,528 டயாலிசிஸ் சுழற்சிகள் செய்யப்பட்டுள்ளன. டயாலிசிஸ் சிகிச்சைக்கான செலவு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கீழ் மேற்கொள்ளப்படுகிறது. காப்பீட்டுத் திட்டம் இல்லாதவர்களுக்கு டயாலிசிஸ் செலவை பெருநகர சென்னை மாநகராட்சியே ஏற்றுக்கொள்கிறது.

இந்த டயாலிசிஸ் மையங்களில் டயாலிசிஸ் சேவைகள் தனித்துவம் பெற்ற NGO மூலமும், இடம், மருத்துவப் பராமரிப்பு, நீர், ஆய்வக ஆய்வு, உயிரியல் மருத்துவக் கழிவு மேலாண்மை, மின்சாரம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் இதரப் பராமரிப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் அ.முருகேசன் மற்றும் ரோட்டரி கிளப் ஆப் சென்னை அப்ஸ்கேல் நிர்வாகிகள் நிலேஷ் குமார் சிங், ஜக்ஜித் சிங், திருமதி கிரிஜா போடுவல் மற்றும் வொக்கார்ட் பவுண்டேசன் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், பெசன்ட் நகர், அஷ்டலட்சுமி கோயில் அருகில் உள்ள குடியிருப்புப் பகுதியில் நேற்று (22.09.2023) நடைபெற்ற டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது, மேயர் திருமதி ஆர். பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத் , நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி , வட்டார துணை ஆணையாளர் (தெற்கு) எம்.பி. அமித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி. சி.செல்வ விநாயகம், மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ் , மாமன்ற உறுப்பினர், மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்விப் பாதையில் மற்றுமொரு மைல்கல்தான் முதல்வரின் காலை உணவுத் திட்டம்!

**எல்லோரும் இன்புற்று வாழும் இடம்தான் என் இலட்சிய பூமி**

**பேரறிஞர் அண்ணா**


**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் கனவு மெய்ப்பட வேண்டும் என்பதற்காக கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திராவிட மாடல் அரசாங்கத்தின் மற்றுமொரு திட்டமான காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். முதற்கட்டமாக 1,543 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவர்களுக்கு இந்த திட்டம் தொடங்கப்பட்டது. அடுத்த கட்டமாக, இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி தொடங்கி தமிழ்நாடு முழுவதும் உள்ள 31,008 பள்ளிகளில் பயிலும் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவர்களுக்கு இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

**சத்தான சரிவிகித உணவு**

அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை தமிழ்நாடு அரசு முன்னெடுத்த வருகிறது. அத்தகையத் திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒட்டு மொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது. பல்வேறு நிதிச் சுமைகளுக்கிடையே இந்த திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார் என்றால் இதனுடைய முக்கியத்துவத்தை பற்றி அவர் நன்கு அறிந்து ஒரு தாயுள்ளத்துடன் இந்த திட்டம் உடனடியாக கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒருவன் உண்ணும் உணவின் வகைகள் மற்றும் அவனது உணவுப் பழக்கவழக்கங்கள் அவனது உடம்பில் உயர்த்தாதுச் (HUMAORAL EQUILIBRIUM) சமநிலை ஏற்படவோ அல்லது பாதிக்கப்படவோ முக்கிய காரணிகளாகும். நோய்களுக்கெதிரான தடுப்பு முறைகளுக்கு உயிர் தாதுச் சமநிலையிணைக் கட்டிகாப்பது அவசியமாகும். இதற்கு சத்தான, ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட உணவுகள் அத்தியாவசியமாகும். எல்லா மருத்துவ முறைகளிலும் இக்கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

முனைவர்
**தேன்மொழி பொன்முத்துராமலிங்கம்**
*நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளர்*
*இராணி மேரி கல்லூரி*



மருத்துவ அறிஞர்களால் வாதம், பித்தம், கபம் என்று எண்ணப்படுகின்ற மூன்று தாதுக்கள் உடம்பில் மிகுந்தாலும், குறைந்தாலும் உடலில் நோய் ஏற்பட ஏதுவாகிறது. இதே கருத்தினைத் தமிழ் புலவர் திருவள்ளுவர் தனது குறளில் பின்வருமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று (குறள்941)**

**பசிப்பிணி தீர்த்த வள்ளல்**

பசி என்பது ஒரு மோசமான நோய் என்பதை திருவள்ளுவர் பசி என்னும் தீப்பிணி என்று கூறுகிறார்.

ஒரு நோயினால் உடல் பாதிக்கப்படும் போது அந்நோய் தொடர்பான உறுப்பு தான் பாதிக்கப்படும். ஆனால் பசியென்னும் பிணியினால் பாதிக்கப்படும் போது "பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்" என்ற பழமொழிக்கிணங்க உடலுறுப்புகளனைத்தும் ஒரு சேரச் செயலிழந்து விடுகின்றன. இதன் காரணமாக பசி அல்லது பட்டினி என்பது ஒரு பயங்கர நோயாகக் கருதப்படுகிறது. ஆகவே பசி அல்லது பட்டினியை ஒரு நோயாகக் கருதும் போது அந்நோயினால் வாடும் ஒருவனுக்கு உணவினையளித்து அவனுடைய பசி நோயினைத் தீர்க்கும் அவனை பசிப்பிணி தீர்க்கும் மருத்துவன் என்று சங்க காலத்தில் அழைத்துள்ளனர்.

**"பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"**
**(புறநானூறு173)**

மணிமேகலை இலக்கியத்தில் தனது அமுதசுரபியிலிருந்து உணவளித்து ஏழை மக்களின் பசியை போக்கிய மணிமேகலை "ஆருயிர் மருத்துவி" என்று போற்றப்படுகின்றாள்.

எனவே மாணவர்களின் பசிப்பிணி தீர்த்த வள்ளலாக என்றென்றும் நமது முதலமைச்சர் அவர்கள் போற்றப்படுகிறார்.

**உலக பட்டினி குறியீடு 2022 (THE GLOBAL HUNGER INDEX GHI)**

இந்த காலை உணவுத் திட்டம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் தொடங்கப்படுகிறது என்றால் உலக பட்டினி குறியீடு 2022 கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது (THE GLOBAL HUNGER INDEX GHI) இந்த பட்டியலில் 121 நாடுகள் அடங்கிய இப்பட்டியலில் 107 வது இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது. இதில் அண்டை நாடுகளான பாகிஸ்தான் 99, இலங்கை 64, வங்கதேசம் 84, மியான்மர் 71 போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் கூட இந்த குறியீட்டில் இந்தியாவை விட முன்னேறிய நிலையில் இருக்கின்றது.

இந்தியா தீவிரமான வகையின் கீழ் (SERIOUS CONDITION) என அடையாளம் காணப்பட்ட 31 நாடுகளில் ஒன்றாகும். இப்படி பசி தீவிரமானதாக கருதப்படும் சூழ்நிலையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக, இந்த தொலைநோக்குத் திட்டம் இந்தியாவில் முதன் முதலாக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

**திராவிட மாடல்**

சங்க காலம் தொடங்கி தமிழ் மக்கள் பசியற்ற சமூகமாக உருவாக வேண்டும் என்ற இலக்கை நோக்கி முன்னேறியுள்ளனர். திராவிட மாடல் அரசாங்கம் என்பது சமூகநீதி, பகுத்தறிவு சிந்தனை, அனைவருக்கும் கல்வி, அனைத்து துறைகளிலும் சமத்துவம், அனைவருக்கும் சுகாதாரம் என்பது தான் திராவிட மாடல் அரசாங்கத்தின் கண்களாக கருதப்படுகின்றது. பேராசிரியர்கள் கி.கலையரசன் மற்றும் வி.விஜயபாஸ்கர் இருவரும் எழுதி வெளியாகியுள்ள THE DRAVIDIAN MODEL INTERPRETING THE POLITICAL ECONOMY OF TAMILNADU "திராவிட மாதிரி தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதாரம் குறித்து விளக்கமளித்தல்" என்ற புத்தகத்தில் கடந்த 100 ஆண்டுகளில் புள்ளி விவரங்களின் அடிப்படையில் திராவிட மாதிரியின் மூலம் எப்படி தமிழ்நாடு சமூக பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டு முன்னேறிய மாநிலமாக மாறியது என்பதற்கு இவர்கள் பல காரணிகளை முன்வைக்கிறார்கள்.

★ விளிம்பு நிலையில் இருக்கும் சமூகத்திற்காக சாதிய அடிப்படையில் 69% இடஒதுக்கீட்டை பாதுகாக்க அரசியலமைப்பு சட்டம் 9 வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

★ மால்கம் ஆதி சேசைய்யா மிக ஆழமாக ஆராய்ந்து சுகாதார சேவையின் பிரச்சனைகளை அறிக்கையாக அன்றைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் சமர்ப்பித்தார். அதனடிப்படையில் அனைவருக்கும் சுகாதாரம் என்பதை அரசு திட்டமிட்டு அணுகியது.

★ கல்வி சனநாயகப்படுத்தப்பட்டது, கிராமப்புற வறுமை ஒழிப்பில் முன்னேற்றம் தொழித்துறையில் வளர்ச்சி ஆகியவற்றை முன்வைக்கிறார்கள்.

**மதிய உணவு திட்டம்**

திராவிட மாடல் வளர்ச்சித் திட்டங்களின் ஒரு அங்கமாக இந்தியாவிலேயே முதல் முறையாக 16.09.1920 அன்று மதிய உணவுத் திட்டம் நீதிக்கட்சியால் தொடங்கப்பட்டு, சர்.பிட்டி.தியாகராயர் தலைமையில் சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சி பள்ளியில் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1957 ல் அன்றைய முதலமைச்சர் கு.காமராஜர் அவர்கள், அத்திட்டத்தை மீண்டும் தொடங்கினார். பின்பு திராவிட அரசாங்கத்தால் இத்திட்டம் பல்வேறு பரிணாம வளர்ச்சி பெற்று, இதனால் பயன் பெற்ற மாணவர்கள் இன்று பல்வேறு நாடுகளில் உயர்ந்த பதவிகளில் பணி புரிகிறார்கள். இந்த வெற்றி கதைகள் இன்றும் தொடர்கின்றன.

மதிய உணவுத் திட்டத்தால் மாணவர்கள் ஊட்டச்சத்துகள் நிறைந்த முழுமையான உணவினை அருந்துகின்றனர். மாணவர்கள் பள்ளி வருகை அதிகரித்தது. மாணவர்கள் கற்றல் இடைநிற்றல் தவிர்க்கப்பட்டது, மிகவும் பின்தங்கிய சமூகத்திலிருந்து வரக் கூடிய மாணவர்கள் பள்ளிக்கு வரத் தொடங்கினர். பசியின்றி முழுகவனத்துடன் பாடம் பயின்றனர். வகுப்பறை பசி குறைக்கப்பட்டது. மதிய உணவுத் திட்டத்தின் மூலம் பல சாதி வேற்றுமைகளை கடந்து மாணவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்ள கூடிய பழக்கம் உண்டாகியது. சாதிகளை கடந்து மாணவர்கள் நண்பர்களாக மாறினார்கள். இதுவே ஒரு சமூக சமத்துவத்தை உருவாக்கியது.

இந்த திட்டத்தின் நீட்சியாகத்தான் காலை உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசு பள்ளி மற்றும் அரசு அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் தின கூலி தொழிலாளர்களாகத் தான் இருக்கிறார்கள். எனவே இவர்களால் தங்களது குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி செய்து தர இயலாது. இதனால் 90% மாணவர்கள் காலை உணவு சாப்பிடுவது கிடையாது. இதன் காரணமாக மாணவர்கள் காலை வகுப்புகளில் கவனக் குறைவாகத்தான் இருப்பார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் கல்விக்கூடங்களில் மாணவர்களின் அறிவுப் பசியை தீர்க்கக்கூ கூடிய இடமாக மட்டுமில்லாமல் அவர்களின் வயிற்றுப் பசியையும் தீர்க்கக்கூடிய இடமாக மாறியிருக்கிறது. இது மட்டுமில்லாமல், இந்த திட்டத்தின் மூலம் உழைக்கும் தாய்மார்களின் பளு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த மகத்தான திட்டம் இன்னும் விரிவாக்கம் செய்யப்பட்டு உயர்நிலை மற்றும் அரசு கல்லூரிகளுக்கு கொண்டுவருவதன் மூலம் அரசு பள்ளியில் பயின்று இன்று தமிழகத்திற்கே பெருமை சேர்க்கக் கூடிய திறன் மிகு ஆளுமைகளான சந்திரயான் திட்டக்குழு இயக்குநர் வீரமுத்துவேல் மற்றும் சூரியன் ஆய்வுத் திட்டக்குழு (ஆதித்யா எல் 1) இயக்குநர் நிகர் ஷாஜி, இவர்களை போல் எதிர்காலத்தில் அரசு பள்ளியிலிருந்து தான் பல சாதனையாளர்கள் வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கல்வியை சனநாயகப்படுத்தி, வளர்ச்சியை பரவலாக்கி, தடையற்ற கல்வியை வழங்கி தமிழக மாணவர்கள் அனைவரும் முதன்மையானவர்களாக வர வேண்டும் என்ற கனவோடு **"நான் முதல்வன்"** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய உங்கள் ஆட்சிக் காலம் தான் பள்ளி மற்றும் உயர் கல்வி துறையின் பொற்காலமாக திகழ்கின்றது.

**போற்றுவோர் போற்றட்டும்**
**புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்**
**உங்கள் வழியில் எவருக்கும் அஞ்சாமல் செல்ல**

ஆசிரியர் சமூகத்தின் சார்பாக உங்களை வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்...



சென்னையில், நேற்று (22.09.2023) சிறு தொழில், பொது நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் தலைவர், கர்நாடக மாநில கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் சரணபசப்பாதர் முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் (Karnataka State Handicrafts Development Corporation Limited) சார்பில் புதிப்பிக்கப்பட்ட "காவிரி ("Cauvery) கர்நாடக மாநில கலை மற்றும் கைவினைப் பொருட்கள் எம்போரியத்தை (Karnataka State Arts & Crafts Emporium) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் கே.செல்வப்பெருந்தகை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சென்னை, தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையில்,

## தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 95வது வாரியக்கூட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, செப். 23-*

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (22.9.2023) நாமக்கல் கவிஞர் மாளிகையில், 5வது தளத்தில் உள்ள கூட்டரங்கத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 95வது வாரியக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடல்சார் வாரியத்தின் உறுப்பினர்கள் பங்கு பெற்றார்கள்.

இக்கூட்டத்தை துவக்கி வைத்து, அமைச்சர் எ.வ. வேலு பேசிய விவரம் வருமாறு:-

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 95வது கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் அனைத்து வாரிய உறுப்பினர்களையும் வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை, பல்வேறு வழிகளில் மேம்படுத்திட தமிழ்நாடு அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, கடலூர் துறைமுக மேம்பாடு, நாகப்பட்டினத்திலிருந்து, இலங்கைக்கு விரைவுப் பயணியர் படகு போக்குவரத்து, கன்னியாகுமரி படகு அணையும் மேடை நீட்டிப்பு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையை, தொங்குபாலம் மூலமாக இணைத்தல், துறைமுக மேம்பாட்டாளர்களை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, கடல்சார் வாரிய வருவாயினை பெருக்கும் நோக்கில் துறைமுக கொள்கையை உருவாக்குதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே தமிழ்நாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களை மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் வளர்ச்சிக்கும், தாங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பையும் வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் எஸ்.நடராஜன், போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பனீந்திரரெட்டி, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திருமதி. இ.சுந்தரவள்ளி, நிதித்துறை இணைச் செயலாளர் எச்.கிருஷ்ணன் உன்னி, சிறப்பு அழைப்பாளர்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கட்ராம் சர்மா மற்றும் வணிகக் கடல்துறை, சென்னை (மைய அரசின் பிரதிநிதி, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சம்) கே.எம். ராவ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி கடலோர கமாண்டர் ரவிக்குமார் தினகரா, கடலோர காவல் படை தலைவர் எம்.எஸ். ரவாத் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### பல்லாவரம் வடக்குப் பகுதி தி.மு.க சார்பில்

## பாகம் வாரியாக (பூத்) செயல் வீரர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை வேண்டுகோள்!

*பல்லாவரம், செப்.23*

பல்லாவரம் வடக்குப் பகுதி செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகரம் பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பாக பாகம் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாவட்ட கழகத்தினால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் இரா. நரேஷ் கண்ணா, தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் பம்மல் வடக்கு பகுதி பொருளாளர் ச.பிரபு ஆகியோர் மேற்பார்வையில் ஆலோசனைகளை வழங்க கூட்டங்கள் நடைபெற உள்ளன.

இன்று (23.9.2023, சனிக்கிழமை) 9வது வார்டு கழகத்தின் சார்பில் மற்றும் 15வது வார்டுகளில் சார்பிலும் பாக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

அதைத்தொடர்ந்து நாளை (24.9.2023, ஞாயிற்றுக்கிழமை) காலை 9-வது வார்டு சார்பில் பாகங்களிலும் 15வது வார்டு சார்பில் பாகங்களிலும் ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 9 வது வார்டு சார்பில் இரண்டு பாகங்களிலும், 15வது வார்டு சார்பில் இரண்டு பாகங்களிலும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளன.

பகுதி கழகத்தின் சார்பில் 9வது வார்டுக்கு பகுதி துணைச் செயலாளர் ச. சிவக்குமார், பகுதி கழக அவைத்தலைவர் இரா. சேகர், மாநகரப் பிரதிநிதிகள் என்.ஜி.கருணாமூர்த்தி, எம்.இளங்கோ ஆகியோர் பகுதிக்கழக பிரதிநிதிகளாக சென்று கூட்டத்தை கண்காணிப்பார்கள்.

அதேபோல் 15-ஆவது வார்டுக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், பகுதி கழகப் பொருளாளர் எஸ். நெடுஞ்செழியன். எம்.சி. ஆகியோர் பகுதி கழக பிரதிநிதிகளாக சென்று கூட்டத்தை கண்காணிப்பார்கள்.

வட்டக் கழக செயலாளர் இக்கூட்டங்களில் தேர்தல் பணி குழு உறுப்பினர் கழக 11 பேர், இளைஞர் அணி 10 பேர், மகளிர் அணி 10 பேர் ஆக மொத்தம் 31 பேர் 100 வாக்காளருக்கு ஒருவர் என அமைக்கப்பட்ட குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் அந்த பாகத்தில் வசிக்கும் நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து அந்த பாகத்துக்கு உட்பட்ட ஒரு இடத்தில் சிறப்பான முறையில் கூட்டத்தை ஏற்பாடு செய்து பாக முகவரை தலைமையில் வட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் கூட்டத்தை ஏற்பாடு செய்து அனைவருக்கும் துண்டறிக்கை தந்து சிறப்பாக கூட்டத்தை நடத்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி கழகச் செயலாளர் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் இரா. ரவிசங்கரின் தந்தை திருவுருவ படத்தை சட்ட மன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் தலைமையில் க.ஜெயராமன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., முன்னிலையில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி திறந்து வைத்தார். நிகழ்வில் மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, பகுதி செயலாளர் அ.முருகன், இரா.நரேந்திரன், இரா.கருணா, எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், க.அமுல் வட்ட செயலாளர்கள் த.ஆறுமுகம், ஆர் எஸ் மனோகரன், கி.தினகரன், வி.முருகன், கே.வி.இராஜன், மு.உமாபதி, கே.ஈ.செந்தமிழரசு, என்.கார்த்திபன், க.பாபு, சி.எஸ்.ரவி, இரா.அரிதாஸ், ஜி.மாரிமுத்து வை.கௌதமன், பிரசிடென்சி சி.சதீஷ், எச்.ராஜ்குமார் என்.டி.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வேலூர் - கழக முப்பெரும் விழா பேச்சு!

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, செப். 23 -**

**வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய உரையில், அன்னை மணியம்மையார் அவர்களைக் குறித்து குறிப்பிட்டது தொடர்பாக அளித்துள்ள விளக்கம் வருமாறு:**

17.9.2023 அன்று வேலூரில் நடைபெற்ற கழகத்தின் முப்பெரும் விழா மற்றும் பவள விழா மாநாட்டில் நான் பேசும் போது, கழகத்திற்கும் ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கும் இருந்த தொடர்புகளைக் குறித்து பேசிக் கொண்டு வரும்போது,

"தி.மு.க. தோன்றியதற்கே காரணம், வேலூர் மாநகரம்தான், வேலூருக்கு பிரச்சாரத்திற்கு வந்த தந்தை பெரியார் அவர்கள், மணியம்மையார் அவர்கள் வீட்டில் தங்குவது வழக்கம் என்பார்கள். மணியம்மையாருடைய கட்சிப் பணியைப் பார்த்த தந்தை பெரியார் அவர்கள், மணியம்மையார் அவர்களை கழகப் பணி ஆற்றுவதற்காக உடன் அழைத்துச் சென்றார். எதிர்காலத்தில் கட்சியைக் காப்பாற்ற ஒரு புத்திசாலிப் பெண் கிடைத்து விட்டார் என்கிற வகையில் மணியம்மையாரை பெரியார் திருமணம் செய்து கொண்டார். இது பொருந்தாத் திருமணம் என்று அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறினார்." - இதுதான் அன்றைய தினம் நான் பேசிய பேச்சின் சாரம்.

இதில் ஒரு தவறு எங்கே நடந்தது என்றால், "தந்தை பெரியார் அவர்கள் மணியம்மையார் அவர்களை கட்சிப் பணிக்காக அழைத்துச் சென்றார்" என்று சொல்ல வேண்டிய இடத்தில், "தந்தை பெரியார் அவர்கள் மணியம்மையாரை கூட்டிக் கொண்டு போய்விட்டார்" என்று பேசிவிட்டேன்.

"அழைத்துக் கொண்டு போனார்" என்பதற்கும் "கூட்டிக் கொண்டுபோனார்" என்பதற்கும் மலைத்த வேறுபாடு இருப்பதை நான் உணர்கிறேன்.

என்னுடைய இந்தப் பேச்சு, தமிழர் தலைவர் - அண்ணன் வீரமணி அவர்களுக்கும், தந்தை பெரியார் மற்றும் மணியம்மையார் மீது தீவிரப் பற்றுக் கொண்ட தோழர்களுக்கும் வருத்தம் தந்திருப்பதாக எனக்குச் செய்திகள் வருகின்றன.

இப்படிப்பட்ட ஒரு வார்த்தையை அந்தக் கூட்டத்தில் நான் என் பேச்சில் உபயோகப்படுத்தியதற்காக, நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியாரிடத்திலும், ஆசிரியர் அண்ணன் வீரமணியாரிடத்திலும் நான் எவ்வளவு கொள்கைப் பிடிப்பு கொண்டவன் என்பதை அண்ணன் வீரமணியார் அவர்களே அறிவார்கள்.

இவ்வாறு அவ்விளக்கத்தில், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


சைதை சட்டமன்ற தொகுதியின் சாதனைகளின் தொடர்ச்சியாக...
மண்டலம்-13 வார்டு-170 கோட்டூர்புரம் திட்ட பகுதி சித்ராநகர் அருகில்
நாள்: 23.09.2023 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: கோட்டூர்புரம் திட்ட பகுதி
மாண்புமிகு தமிழ்நாடு
முதல்வர்
அவர்களின் ஆணைக்கிணங்க
ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள 1800 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,MLA
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மாண்புமிகு தா.மோ.அன்பரசன் MLA
குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திருமிகு மு.மகேஷ்குமார் B.A.,MC
துணைமேயர்-பெருநகர சென்னை மாநகராட்சி
இரா.துரைராஜ் MC
13 வது மண்டலக்குழு தலைவர்
எம்.கிருஷ்ணமூர்த்தி MC
10 வது மண்டலக்குழு தலைவர்
மற்றும் கழக முன்னோடிகள் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கும்...
170 வது வட்ட தி.மு.க
சைதை கிழக்கு பகுதி
எஸ்.ஜே.சலாம்
மாவட்ட பிரதிநிதி - சென்னை தெற்கு மாவட்டம்


சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை
நடத்தும்
தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன்
திருவுருவச் சிலை - அறிவகம் திறப்புவிழா
நாள் : இன்று (23.09.2023) சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம் : கொண்டம்பட்டி மேடு, சேந்தமங்கலம் சாலை, நாமக்கல்.
சிலை மற்றும் அறிவகம் திறந்து வைப்பவர் :
மு.க.ஸ்டாலின், அவர்கள்
கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர்
வரவேற்புரை : திரு. K.R.N.இராஜேஸ்குமார், M.Com., D.C.M., M.P., அவர்கள்
நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர்
தலைமை : டாக்டர் பழனி ஜி.பெரியசாமி, அவர்கள் தலைவர் பிஜிபி குழுமம்
முன்னிலை : மாண்புமிகு. மா.மதிவேந்தன், அவர்கள் வனத்துறை அமைச்சர்
மாண்புமிகு. ஏ.கே.பி.சின்ராஜ், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்
திரு. பெ.இராமலிங்கம், அவர்கள் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்
திரு. கே.பொன்னுசாமி, அவர்கள் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. ச.சேகர், அவர்கள் பரமத்தி வேலூர் சட்டமன்ற உறுப்பினர்
வாழ்த்துரை : மாண்புமிகு. மு.பெ.சாமிநாதன், அவர்கள் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
திரு. பி.தங்கமணி, அவர்கள் குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன், அவர்கள் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர்
நன்றியுரை : திரு. செ.கொங்குவேள், அவர்கள் சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை
விழாவிற்கு அனைவரையும் வருக ! வருக !! என வரவேற்கும்
திருமதி. பூங்கோதை செல்லதுரை அவர்கள் மற்றும் சிலை அமைப்புக்குழு


நாள் : 23.09.2023 சனிக்கிழமை
காலை 9.00 மணி
இடம் : 170-வது வட்டம்,
கோட்டூர்புரம், சென்னை - 85
சைதை தொகுதியில் தொடரும் சாதனைகளின் தொடர்ச்சியாக...
சென்னை மாநகராட்சி மண்டலம்-13 வார்டு 170, கோட்டூர்புரம் திட்டப் பகுதி சித்ராநகர் அருகில்
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்
ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட உள்ள 1800 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா!
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
குறு - சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
இவர்களின் முன்னிலையில்
அடிக்கல் நாட்டுவிழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் MP
மு.மகேஷ்குமார் B.A.
சென்னை மாநகர துணை மேயர்
எம்.கிருஷ்ணமூர்த்தி MC
சைதை மேற்கு பகுதி கழக செயலாளர்-10வது மண்டலக்குழுத் தலைவர்
எஸ்.குணசேகரன்
மாவட்ட அவைத் தலைவர்
அன்புடன் வரவேற்கும்
இரா.துரைராஜ் MC
சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர் - 13வது மண்டலக்குழுத் தலைவர்
சைதை கிழக்கு பகுதி தி.மு.க. - சென்னை தெற்கு மாவட்டம்



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று (22.09.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர், பிரபாகர் முதன்மை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர், அனைத்து தலைமைப் பொறியாளர் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கே.குமரேசன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில்

# சென்னை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் நற்றமிழ் நாயகரைப் போற்றும் சொற்களைத் திருவிழா!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - நடிகர் மதன்பாப் குழுவினர் பங்கேற்பு!

சென்னை,செப்.23

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நற்றமிழ் நாயகர்களைப் போற்றும் சொற்களைத் திருவிழா 92-வது வட்ட பகுதியில் உள்ள முகப்பேர் வெல்கம் பேலஸ் திருமண மண்டபத்தில் இன்று (23.09.23) மாலை 5.00 மணியளவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.குமரேசன் தலைமை ஏற்கிறார். முன்னிலை: நொளம்பூர் வே. ராஜன் (மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11-வது மண்டல குழு தலைவர்), எம்.எம்.ஜெயரத்தினம் (92-வது வட்ட கழக செயலாளர்) எம்.ஏ.செந்தில்சுரேஷ், பகுதி துணை செயலாளர் எம்.சி.எழிலரசு, மாவட்ட பிரதிநிதி, துணை அமைப்பாளர்கள் ஏ.ஜி.வேலன் எம்.சி., அழகிரி, ஏ. சுந்திரி, எம்.எஸ்.பிரபா, பகுதி கழக நிர்வாகி கள் ஆ.மாலினி, மாமன்ற உறுப்பினர் தீ. பாலாஜி, எம்.உதயகுமார், வட்ட செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.இ.ஸ்டாலின் எம்.சி., சி.சசிகுமார், எம்.ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி மாதவன், ஹேமலதா, கணபதி கே.ராஜி, சங்கர் கணேஷ், பாரதி, அண்ணா வேலன், செல்வி, ரமேஷ், சாந்தி, ராமலிங்கம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்கள் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, (கழக நாடாளுமன்ற குழுத் தலைவர்), மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளரும் காரம்பாக்கம் க.கணபதி.

நிகழ்ச்சியில் நகைச்சுவை நடிகர் மதன் பாப் குழுவினரின் கொஞ்சம் பாட்டு..., கொஞ்சம் நகைச்சுவை.. நெஞ்சம் நிறை இசை.. அரங்கம் நடைபெறுகிறது.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார் மற்றும் மாநில பொறியாளர் அணி நிர்வாகிகள், தலைமை கழக மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நன்றியுரை கே.விவேக் குமார் பி.மோகன்.

---

### நாமக்கல் - சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம்பட்டிமேடு)

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கிறார்!

**நாமக்கல், செப். 23-**

**தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை, நாமக்கல் மாவட்டம் - கொண்டம்பட்டி மேட்டில் நிறுவப் பட்டுள்ளது.**

**இத்திருவுருவச் சிலையினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று காலை காணொலி மூலம் திறந்து வைத்து - விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.**

இவ்விழா பற்றிய விபரம் வருமாறு:-

சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை சார்பில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் 'அறிவகம்' எனும் நூலகம் ஆகியன நாமக்கல் - சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம் பட்டிமேடு) - சிலம்பொலியார் நகரில் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றின் திறப்புவிழா - இன்று (23.9.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு - பி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் டாக்டர் பழனி. ஜி.பெரியசாமி தலைமை வகிக்கிறார்.

கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி., பி.இராமலிங்கம் எம்.எல்.ஏ., கு.பொன்னுசாமி எம்.எல்.ஏ., ச.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சாந்தலிங்க மருதாசல அடிகளார் ஆகியோர் - அன்பு அருளுரை வழங்குகின்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி வாயிலாக, தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் அறிவகத்தைத் திறந்து வைத்து, விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் - சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் 'இளங்கோ விருது' மற்றும் 1 லட்சம் ரூபாய் பொற்கிழி - புலவர் தமிழமுதனுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன், முனைவர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் நிர்வாகியும் - சிலம்பொலியாரின் புதல்வருமான செ.கொங்குவேள் நன்றி கூறுகிறார்.

கவிஞர் தமிழன் ராகுல் காந்தி - நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்குகிறார்.

---

### நெடுஞ்சாலைத்துறையின் மூலம்

# சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, செப்.23

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள் அமைப்பது குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று (22.9.2023) நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலைகள் பராமரிப்பு மற்றும் தரமான சாலைகள் அமைப்பது குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றுகையில், சாலைகள் பராமரிப்பிற்கு தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும், தரமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், முதலமைச்சர் அவர்கள் 19.9.2023 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவித்தார்.

சாலைகளை பராமரிப்பது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் முக்கிய பணியாகும். பராமரிப்பு பணிகளுக்கு அனைத்து பொறியாளர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். முதலமைச்சரின் விபத்தில்லா தமிழகம் என்ற இலக்கை அடைய சாலைகள், பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்கப்பட வேண்டும். தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலைகளாக இருந்தாலும், அவற்றில் குழிகள் (pot holes) இருப்பின் அதை ஆய்வு செய்து, சீர் செய்ய திட்ட இயக்குநர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரிடம் அறிவுறுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சென்னை-கன்னியாகுமரி சாலை மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களில் செயல்படுத்தப்படும் சாலைகளில், தார் சாலை போடும் வரை போக்குவரத்துக்கு ஏற்றவாறு சாலைகளை பராமரிக்க வேண்டும். அவ்வாறு பராமரிக்கத் தவறும் பட்சத்தில், அது குறித்த தகவல்களை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகை சேர்ந்த பொறியாளர்கள், உடனடியாக கண்டறிந்து அதனைத் தலைமை பொறியாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

சாலைகளில் உள்ள வேகத்தடைகளை வர்ணம் பூசி தேவையான அறிவிப்பு பலகைகள் அமைத்து, விபத்துக்கள் ஏற்படா வண்ணம் பராமரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சாலை பாதுகாப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சாலையில் உள்ள மரங்களுக்கு கருப்பு வெள்ளை வர்ணம் அடித்தல், போன்ற பணிகளை செய்து விபத்து ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். சாலை ஓரங்களில் உள்ள ஆபத்தான, உடையும் நிலையில் உள்ள மரக்கிளைகள் அகற்றப்பட வேண்டும். சாலைப் பணிகளை தரமாக செயல்படுத்துவதை தாரக மந்திரமாக கொண்டு, பொறியாளர்கள் பணியாற்ற வேண்டும். அனைத்து பணிகளுக்கும் பண பட்டுவாடா செய்யும் முன் தரக்கட்டுப்பாட்டு பிரிவு அலுவலர்களைக் கொண்டு தரத்தினை உறுதி செய்து கொண்ட பின்பே பண பட்டுவாடா செய்ய வேண்டும்.

ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலை அலகில் உள்ளதுபோல் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் பிற அலகுகளில் செயல்படுத்தப்படும் பணிகளிலும் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களின் அறிவிக்கையை அளவு புத்தகங்களில் அளவீடு பதிவு செய்ய வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

மேம்பாட்டு பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடம் சாலைகளை ஒப்படைத்த பின், அச்சாலைகளில் ஏற்படும் நொடிகளை அவ்வப்போது சீர்செய்து, பணி முடிக்கும் வரை பள்ளமில்லா சாலைகளாக பராமரிக்க வேண்டிய பொறுப்பு அந்த ஒப்பந்த தாரருக்கு உள்ளது, அதை உறுதிசெய்ய வேண்டியது அந்த பொறியாளரின் கடமையாகும், இவ்வாறாக இல்லாமல் அந்த ஒப்பந்ததாரர் தார் பணி செய்யும் வரை பள்ளங்களுடன் சாலைகள் வைத்துக் கொண்டிருப்பது அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிறது.

பணிகள் செயலாக்கத்தின்போது, சாலை பாதுகாப்புக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணி நடைபெறும் இடங்களில் சாலை பாதுகாப்பு உறுதி செய்வதை சாலை பாதுகாப்பு அலகில் உள்ள பொறியாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து அதை உறுதி செய்ய வேண்டும். பணிகள் நடைபெறும் பொழுது விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் உயிரிழப்புகள் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அமைச்சர் அவர்கள், நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே (அதாவது அக்டோபர் மாதம்) முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மெட்ரோ, கழிவுநீரகற்று வாரியம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே சாலைகளில் தோண்டப்பட்ட பள்ளங்களின் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து உடனடியாக பணிகளை செயலாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட சாலைகளில் தோண்டும் பணிகள் அனைத்திலும் அக்டோபர் மாதத்திற்குள் மறுசீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக உயர்மட்ட புருவங்களை வெட்டுதல், தாழ்ந்த புருவங்களை நிரப்புதல் போன்ற பணிகளை செய்ய வேண்டும். பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள், வடிகால்களில் உள்ள செடிகள், முட்புதர்கள் போன்ற தடைகள் நீக்கப்பட வேண்டும்.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளில் உள்ள (Catch pit) பிடிக்குழி, வடிகால் போன்றவற்றை மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். மழை பெய்தவுடன் கள ஆய்வு செய்து, எங்கு மழைநீர் தேங்குகிறது, எங்கு மழை நீர் சாலையைக் கடக்கிறது போன்றவற்றை ஆய்வு செய்து, அவற்றை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மின் அறுவை இயந்திரம், ஜெனரேட்டர், மின்சார நீரேற்று பம்புகள் மற்றும் லாரிகள் போன்ற அனைத்து இயந்திரங்களையும் உடனடியாகக் கொண்டு செல்ல ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தேவை அடிப்படையில் மணல் பைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு முன் கூட்டியே தயாராக இருக்க வேண்டும். அவசர கால பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மழைக்காலத்தில் வாகன சுரங்கப்பாதைகள் மற்றும் பாதசாரிகளின் சுரங்கப்பாதைகளில் நீர் தேங்குவதைத் தவிர்க்க தேவையான நீரேற்று பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

மேலும், அண்ணாசாலை, பூந்தமல்லி சாலை, ஜவகர்லால் நேரு சாலை, கத்திப்பாரா முதல் கோயம்பேடு வரை, ஜெனரல் பீட்டர்சன் சாலை, காந்தி இர்வீன் பாலம், திருவள்ளுவர் சாலை, இராமபுரம் சாலை, கொளத்தூர் சாலை, சென்னை தினத்தந்தி அலுவலகம் முன்பாக போன்ற இடங்களில் நடைபெறும் பணிகளை போர்க்கால அடிப்படையில் அடுத்த 15 நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.

இந்த வருடம் நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளுக்காக 46 பணிகளுக்கு 105 கோடி ரூபாய் மதிப்பில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அனைத்துப் பணிகளும் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். கொளப்பாக்கம் சாலை, அணை ஏரி போன்ற இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் விரைந்து செயல்படுத்தி முடிக்கப்பட வேண்டும். மழை நீர் வடிகால் பணிகளை கண்டறிந்து விரைந்து முடிக்கப்பட வேண்டும். மேலும் இந்த ஆண்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிகால்களில் வண்டல் மண்ணை பிடிக்கும் குழி பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி விரைந்து முடிக்கப்பட வேண்டும். எச்சரிக்கை பலகைகள், தகவல் பலகைகள், ஆகியவற்றின் இணைப்புகளில் உறுதித்தன்மை சரி பார்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய 100 இடங்களில் மரக்கன்றுகள் நடுதல், 100 இடங்களில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள், 100 சிறு பாலங்களை புனரமைத்தல் போன்ற பணிகளை திட்டமிட்டவாறு செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த வருடம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நபார்டு, சிஆர்ஐடிபி, சிஎம்டிபி, போன்ற பல்வேறு திட்டங்களில், அனைத்து அலகுகளில் உள்ள பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரித்து, ஒப்பந்த புள்ளியில் கோரப்பட்டு, விரைவாக பணிகள் துவங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தெரிவிக்க, ஒரு செயலி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கலைஞர் 100
1924 - 2023
நாள் : 23.09.2023
காலை 9.00 மணியளவில்
எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்
இ.பரந்தாமன்
தொகுதி மேம்பாட்டு நிதியில்
கே.பி.பார்க் பகுதியில் உடற்பயிற்சிக்கூடம்,
16 பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பு (Smart Class)
மாநகராட்சி விளையாட்டுத் திடல்
ஆகியவற்றை திறந்து வைத்தல் !
சேத்துப்பட்டு, எம்.எஸ் நகரில் நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்பு
கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டல் !
என பல்வேறு திட்டப்பணிகள் குறித்த
நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும்
சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்,
மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்,
பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர்,
மண்டல குழு தலைவர்கள்,
எழும்பூர் தொகுதி உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும்
கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள்,
பகுதி கழக - வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,
கழக முன்னோடிகள் ஆகியோரை
வருக ! வருக ! என வரவேற்கிறோம்.
சங்கர் டிசைன்
இவண் : எழும்பூர் சட்டமன்ற தொகுதி

### தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (நான்காவது பட்டியல்)

## பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் - ஜி.யூ.நீலமேகம் டி.சி.இ எண்4, சிவன்கோவில் தெரு, செருமாவிலங்கை, நெடுங்காடு அஞ்சல், காரைக்கால்

துணை தலைவர் - பி.சரவணகுமார் டி.இ.சி.இ எண் 127, இராஜாத்தி நகர், காரைக்கால்

அமைப்பாளர் - **ஜெ.ஜெய்பாபு பி.டெக்** 270/1 மெயின்ரோடு, தக்களூர், காரைக்கால்

துணை அமைப்பாளர்கள் - எஸ்.எடிசன் ரொனால்ட் ஜவகர் டி.சி.இ எண் 35, ஜீவானந்தம் வீதி, காரைக்கால் ஹெச். முஹமது அபுதல்ஹா டி.சி.இ 11-வி.எஸ் நகர் புதுத்துறைரோடு, காரைக்கால் கே.பாலசந்திரன் டி.இ.இ.இ 10.செபஸ்தியார்கோவில் தெரு காரைக்கால் பி.கார்த்திக் பி.டெக் 42 வயல்கரை வீதி, காரைக்கால் டி.ஹரிபிரசாத் ஐடி 85 காமராஜர்சாலை, காரைக்கால்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - எஸ்.பி.பூபாலன் 47,48, 12வது குறுக்குத் தெரு, கிருஷ்ணா நகர், புதுச்சேரி 09 துணை தலைவர் - ரா.மணிகண்டன் 20 முதல் தெரு, பெரியார் நகர், மணவெளி, அரியாங்குப்பம் புதுச்சேரி 605007

அமைப்பாளர் - **ஆ.அருண்குமார்** 38 பஜனை மடத்து வீதி, தேங்காய்திட்டு, புதுச்சேரி 4

துணை அமைப்பாளர்கள் - ஆ.பிரபாகரன் 30 மெயின் ரோடு, சுள்ளியான்குப்பம், மனப்பட்டு அஞ்சல், புதுச்சேரி 02 ஏ. வீரமணிகண்டன் 15, பெரியபேட், கரையாம்புத்தூர், புதுச்சேரி 06 கு.சுவாதி ஜி27,தியாகு முதலியார் நகர், முதலியார்பேட்டை, புதுச்சேரி 04 க. உமாபதி 13, ஒத்தவாதை வீதி, கோவிந்த சாலை, பாரதிபுரம், புதுச்சேரி 11 ஏ.எழிலரசன் 51 சரோஜினி வீதி, ரோஜா நகர், அரும்பார்த்தபுரம், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 10 சு.முகுந்தன் 17, பிள்ளையார் கோவில் வீதி தேங்காய் திட்டு, புதுச்சேரி 4 இரா. பிரகாஷ் 24, மாரியம்மன் கோவில் வீதி குண்டுப்பாளையம், தட்டாஞ்சாவடி புதுச்சேரி 09 வி.ரமேஷ் 7 இந்திரா காந்தி வீதி, ராம் நகர், சண்முகாபுரம், புதுச்சேரி 9 சே,சுவர்ணராஜ் எப்.2 - சத்தியம் அப்பார்ட்மெண்ட் முதல் குறுக்குத் தெரு, எம்.ஜி.ஆர் நகர், மேரி உழவர்கரை, புதுச்சேரி ம.அர்ஜீன் (ஏ) ரங்கராஜீ 137, சின்ன சுப்புராயப்பிள்ளை விதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி -1

**திருச்சி வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜி.கலைச்செல்வன் கண்ணனூர் பாளையம், துறையூர் வட்டம், திருச்சி ஆர்.ரமேஷ் 4/148 டி. ரெங்கநாதபுரம் (அ) துறையூர் வட்டம், திருச்சி

**கரூர் மாவட்டம்**

தலைவர் - எஸ்.மகேஸ்வரன் ஏ.கே.பாரதி நகர், அப்பிபாளையம் (அ) மண்மங்கலம், கரூர்-03

துணை தலைவர் - ஆர்.தினகரன் 24டி, வள்ளுவர் தெரு, பசுபதிபாளையம் (அ) கரூர் தாலுகா, கரூர் 04

அமைப்பாளர் - **வி.அருண்** 79சி-21 அருகம்பாளையம் தாந்தோனிமலை (அ), கரூர் தாலுகா கரூர் -05

துணை அமைப்பாளர்கள் - தாண்டவபிரசாத் 13/4ஏ, கே. துறையூர், தோகைமலை(அ) குளித்தலை தாலுகா, கரூர் பி. இளங்கோவன் 1/1 சத்திய மூர்த்தி நகர், 6 வது தெரு, தாந்தோனிமலை (அ) கரூர் தாலுகா, கரூர் வி.இளங்கவி 3/5 ஆண்டாங்கோவில் புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு (அ) மண்மங்கலம் தாலுகா, கரூர் எம்.செல்வகுமார் 257 கட்டளை அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் வடக்கு, கட்டளை அஞ்சல், கரூர் ஜி.சிலம்பரசன் 7/152 மாரியம்மன் கோவில் தெரு, நெரூர் வடபாகம், பழையூர் (அ) மண்மங்கலம் தாலுகா, கரூர்

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - ராஜேஸ் ரெத்தினமணி 20/112 கன்னக்குறிச்சி நடுவூர், கணபதிபுரம் அஞ்சல் கன்னியாகுமரி (மா)

துணை தலைவர் - மு.பழனி 19 அம்மன் கோவில் தெரு, வீரநாரயணமங்கலம், தாழக்குடி, கன்னியாகுமரி (மா)

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - க.ஆனந்த் 10/28 சிங்காரதோப்பு தெரு, கூடன்குளம் 06

துணை தலைவர் - பி.தினகர பாண்டியதுரை, 3ஏ, கம்மாளர் மேல தெரு, அம்பாசமுத்திரம்

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜாண்சன் டேவிட் க.எண் 26 சுந்தரவேல்புரம் முதல் தெரு, தூத்துக்குடி க.சின்னத்துரை கேம்ப்1, தெர்மல் நகர், தூத்துக்குடி -5

**திருவாரூர் மாவட்டம்**

திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **சா.பகலவன்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **இரா.கி.பிரபாகரன்** (6/243 புற்றிடண்கொண்டாஞ்சேரி, திருக்கருக்காவூர் அஞ்சல், வலங்கைமான் வட்டம், திருவாரூர்) அவர்கள் திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மதுரை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - பி.எம். தங்கத்துரை பாண்டியன், பெருமாள்பட்டி, வண்டியூர், மதுரை 20 ஜெ.சுஜின் ஜான் 140, டி.என். ஹெச்.பி காலணி, தமிழ்நகர், ஆனையூர், மதுரை எம். மணிகண்டன் 5-909 காயாம்பட்டி, கொங்கம்பட்டி, மேலூர், மதுரை

**இராமநாதபுரம் மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - கா.மருதுபாண்டி, 2/ஏ இளங்கோவடிகள் தெரு, இராமநாதபுரம், வி.முகனேஸ்வரன், நெ 3.2960, ஆத்மநாதசாமி நகர், பட்டிணம்காத்தான், இராமநாதபுரம் த. சபிக்குர் ரஹ்மான் 3213, வெற்றில்லைக்கார தெரு, இராமநாதபுரம்,

**கோவை தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - கே.பி.எஸ். சத்தியமூர்த்தி 8/282 சாய்குடில், துளசிங்கநகர் வால்பாறை, 642127

**தஞ்சை மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர் - கே.ஆர்.பி.சீனிவாசன், எம்.டெக்., எம்.எஸ்.டபிள்யூ., 53,நடுத்தெரு, கடம்பன்குடி, அம்பதுமேல்நகரம் அஞ்சல், திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்

**நாகப்பட்டினம் மாவட்டம்**

தலைவர் - பிரசாத் (ஏ) ராஜேந்திரபிரசாத் 61/எப்8 நீலா வடக்கு வீதி, நாகப்பட்டினம்

துணை தலைவர் - ச.சண்முகராஜேஸ்வரன் 3/284 காளியம்மன் கோவில் தெரு, மேலவாழக்கரை & அஞ்சல் திருக்குவளை வட்டம், நாகப்பட்டினம்

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - **சி.எம். வினோத்** 25- 3217 திரெளபதியம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர்

துணை அமைப்பாளர்கள் - எ.நிமல்பிரசாத், 9-4 சுப்ரமணியபுரம், 2வது தெரு, எம்.சி ரோடு, தஞ்சாவூர் என். துரைராஜன் 186, 4வது தெரு நட்சத்திராநகர் தஞ்சாவூர் எஸ்.ராகுல் 28எ, அலிகுப்தா தைக்கால், வ.உ.சி நகர் அருகில், தஞ்சாவூர் நீ. மணிகண்டன் 515 கீழராஜவீதி, தஞ்வாவூர் பி.பார்த்திபன் எம்.ஐ.ஜி முல்லைதெரு, புதியவீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - போ.தேவராஜ் பிக்கைகண்டி, சோலூர், உதகை, நீலகிரி துணை தலைவர் - ஜே.பிரதீஷ் ஜோபின் 4/73ஜி ஓ.வி.எச். சாலை, கூடலூர்

அமைப்பாளர் - **ஆர்.செந்தில்நாதன்** கொட்டநள்ளி, நெடுகுளா, நீலகிரி

துணை அமைப்பாளர்கள் - வி.தமிழ்செல்வன் ஆனந்தகிரி, கோத்தகிரி நீலகிரி ˙ரீராம் நெல்லியாளம், பந்தலூர், நீலகிரி டி. ஜீவகுமார் 151/சி முள்ளிக்கொரை, நீலகிரி ஜி.சந்தீப்குமார், 31/55 குமரன் நகர் குன்னூர், நீலகீர் தங்கேஷ் 6/423 கோர்பெட்டா, கோத்தகிரி நீலகிரி சி.எ.முஜிப்பூர்ரகுமான் 77 பாம்பேகேசில், உதகை ஆ.தினேஷ் பேக்டரிமட்டம், கௌப்பள்ளி, நீலகிரி கா. விஜயன் 19/52பி ஏலமன்னா, நெல்லியாளம், நீலகிரி

**விழுப்புரம் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பா.சரவணன் 3/381 பாளையம் வீதி, மயிலம், , திண்டிவனம் தாலுக்கா

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.என்.எம்.குமரேசன், மாப்பிள்ளையார்குளம், புதுக்கோட்டை. தி.சதீஸ்குமார், 28, நம்புரான்பட்டி, மோகனூர் அஞ்சல், புதுககோட்டை மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 22-09-2023

**கு. கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

### தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (ஐந்தாவது பட்டியல்)

## தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி- காரைக்கால் மாநிலம்**

தலைவர் - டி.சண்முகம் எண் 7/2, சேனியர் வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால்

துணைத் தலைவர் - ஜெ.சக்தி எண் 61, புதுத்தெரு, கோட்டுச்சேரி, காரைக்கால்.

அமைப்பாளர் - **டி.குபேந்திரன்,** எண் 3, பெரமசாமிபிள்ளை வீதி, காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பரந்தாமன், எண் 9, எல்லையம்மன் கோவில் தெரு, திருப்பட்டினம், காரைக்கால்.

கே.துளசிராமன், எண் 13, பெரியகுளத்து மேட்டுத்தெரு, திருப்பட்டினம் காரைக்கால் கே.செந்தில்குமார், எண் 27, எல்லையம்மன் கோவில் தெரு, திருப்பட்டினம், காரைக்கால். ஆர். யுவராஜ், முக்குளத்து வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால். ஜி. கோபாலகிருஷ்ணன், எண் 36(6) தெய்தா வீதி காரைக்கால்

**தஞ்சை மாநகரம்**

தலைவர் - என்.தெய்வநாயகம், எண்.173-48, ரெட்டிபாளையம்ரோடு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

துணைத் தலைவர் - கே.சுரேஷ்குமார், எண் 68 எ, செக்கடித்தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

அமைப்பாளர் - **டி.ஆர்.சுரேந்திரன்,** எண் 56/2210, சிவராய தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்

துணை அமைப்பாளர்கள் - எம்.ஜெ.ரவிச்சந்திரன், எண்.23, சிவராயர் தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர் பி.டி.அசோகன், எண் 2136, வி.பி.கோயில் சன்னதி தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர் கே.ஆர்.ராஜன், 19/28, தொல்காப்பியர் நகர், 4-ம் தெரு, தொம்பன் குடிசை, தஞ்சாவூர் எஸ்.ஆர்.லெட்சுமண ராமன், எண்.52/38, சிவராய தோட்டம், மானம்புச்சாவடி, தஞ்சாவூர் ஜெ.ஸ்டீபன் அருள்ராஜ், எண்.6, புதிய வீட்டு வசதிவாரியம், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்

**தாம்பரம் மாநகரம்**

தலைவர் - பி.சிவசங்கரய்யா, எண்.81, காமராசர் சாலை, அனகாபுத்தூர், சென்னை - 600070

துணைத் தலைவர் - வி.நடராஜன், எண் 15/7, கம்பர் தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை - 600063

அமைப்பாளர் - **எம்.டி.விஜயகுமார்,** எண் 9, ரங்கைய்யா செட்டி தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070

துணை அமைப்பாளர்கள் - அ.கருணாகரன், எண்.15, பேட்டைத்தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070 வி.ரவி, எண் 15/7ஏ, கம்பர் தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை - 600063 நவீன்குமார், எண் 12 டீ, ரூபி ஷோபா கேஸ்டல், குட்வில் நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை - 600063 ஏ சோமு எண்.18, பக்தவச்சலம் நகர், அனகாபுத்தூர், சென்னை - 600070 கே.எஸ். பாபு எண்.65, கன்னியம்மன் கோவில் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070

**கரூர் மாவட்டம்**

தலைவர் - பி.கே.எஸ்.(எ) கந்தசாமி எண் 28, காந்தி நகர் மெயின்ரோடு, சின்னாண்டான்கோவில் ரோடு, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா கரூர் மாவட்டம்-639001,

துணைத் தலைவர் - கே.வி.தங்கராஜ் எண் 2எ, நீலிமேட்டு சந்து, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639001,

அமைப்பாளர் - **கு.வடிவேல்,** எண் 108, திட்ட சாலை, வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006,

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பி.எம்.சசிகுமார், கழுகூர் உடையார்பட்டி, வைகைநல்லூர் வழி, கழுகூர் அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் -639120, ஆர்.ரவி, எண் 18, பழனியப்பா தெரு, வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006, எஸ்.இளங்கோவன், எண் 16 எ, கே.பி,எஸ்.தெரு, இனாம் கரூர், வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639006, பி.குணசேகரன், எண் 40, வளையபாளையம், பாண்டிலிங்கபுரம் அஞ்சல், புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639151, ஆர்.ராஜகோபால், எண் 2/08, கே.ஆலமரத்துப்பட்டி, கே.பிச்சம்பட்டி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் -639118.

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட மு.சலீம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **ஆ.செந்தில்குமார்,** (வலையங்காடு 1-வது வீதி, காந்திநகர் அஞ்சல், திருப்பூர்- 641603,) அவர்கள், திருப்பூர் தெற்கு மாநகர நெசவாளர் அணியின் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - மா.மதி (ஏ) சுப்புராயன் எண் 10, பெருமாள் கோயில் தெரு, பண்டசோழநல்லூர், நெட்டபாக்கம், புதுச்சேரி மாநிலம்-605106,

துணைத் தலைவர் - கி.கதிரவன் எண் 31, பள்ளிக்கூட வீதி, கோவிந்த சாலை, விஆர்எம் தோட்டம், புதுச்சேரி -11,

அமைப்பாளர் - **ந.செந்தில்முருகன்,** எண் 26, சாலைத் தெரு, முத்தையால்பேட்டை, புதுச்சேரி -605003,

துணை அமைப்பாளர் - த.செல்வராசு, எண் 65, விநாயகர் கோயில் தெரு, சாந்தி நகர், லாஸ்பேட்டை, புதுச்சேரி -605008, வி.வேலாயுதம், எண் 35, ரெட்டியார் தெரு, மடுகரை, புதுச்சேரி -605105. இரா.சேகர், எண் 2, திருநாவுக்கரசர் வீதி, விஸ்வநாதன் நகர், முத்தையால்பேட்டை, புதுச்சேரி -605003, கி. சுப்பிரமணியன், எண் 26, ஜவகர் நகர், 5வது குறுக்குத்தெரு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி -605010, தி.சிவகுமார், எண் 2, தயானந்தர் வீதி, இந்திராநகர், முதலியார் பேட்டை, புதுச்சேரி -4, து.அன்பு, எண் 36, விநாயகர் கோவில் தெரு, சண்முகாபுரம், புதுச்சேரி -605009, க.வேல்முருகன், எண் 5, லோக முத்து மாரியம்மன் கோவில் தெரு, முத்தையால்பேட்டை, புதுச்சேரி -33,

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்டத் துணைத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி.சி.புஷ்பராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **தி.தர்மலிங்கம்,** (1/169டி, தெற்குவீதி, பூளவாடி, உடுமலைப்பேட்டை-642206), அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட நெசவாளர் அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட நெசவாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**ஆந்திர மாநிலம்**

தலைவர் - வி.ஜி.இளங்கோவன் எண் 6-110, புதுத் தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

துணைத் தலைவர் - பி.பி.மெய்யப்பன், கதவு எண்,7-21 ஏ, கே.வி.பி.ஆர்,பேட்டை, நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

அமைப்பாளர் - **பி.கே.சொக்கலிங்கம்** எண் 1-83, கம்சலா தெரு, சத்ரவாடா, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்,

துணை அமைப்பாளர்கள் - கே.இ.பழனி எண் 1-126, பி.டி.எம். தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், கே.ஜி.கிரி, எண்,5-6/44 , மாணிக்கவாசகர் தெரு, ஏகாம்பரகுப்பம், நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், சி.எம்.சதாசிவம் எண் 5-116, நடுத் தெரு, புதுப்பேட்டை, நகரி-517590, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், பி.எஸ்.சீனிவாசன் நடுத் தெரு, சத்ரவாடா, நகரி, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம், எம்.எஸ்.கோதண்டன், எண்,6/87, கே.வி.பி.ஆர்,பேட்டை, நகரி-517592, சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.எஸ்.டி. சாகுல்ஹமீது, 3/83, ஹாமீம்புரம் வடக்கு தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி - 627 005. எஸ்.சங்கரலிங்கம், எம்-89, த.நா.வீ.வசதி வாரியம், அன்பு நகர், பெருமாள்புரம், திருநெல்வேலி. எஸ்.அங்கப்பன், 33ஏ, காந்தி நகர் மெயின் ரோடு, திருநெல்வேலி - 627008.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 18.
நாள்: 22-09-2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்,
தி.மு.க. நெசவாளர் அணி

### குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில்

# வாக்குச்சாவடி வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.23-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகளில் பாகவாரியாக கழக செயலாளர் கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிக்கப்பட்டுள்ள கழகப் பிரதிநிதிகளான தலைமை பொது உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்ராகிம் அய்யப்பன்தாங்கல் ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண் 1 முதல் 27 பாகம் வரையிலும், கீதா ஆனந்தன், பரணிபுத்தூர் ஊராட்சி பாகம் எண் 28 முதல் 44 வரையிலும், மௌலிவாக்கம் ஊராட்சி பாகம் எண் 55 முதல் 65 வரையிலும், இரா.பாஸ்கரன், கொளப்பாக்கம் ஊராட்சி பாகம் எண் 125 முதல் 136, கோவூர் ஊராட்சி 45 முதல் 55 வரையிலும், இரண்டாங்கட்டளை ஊராட்சி 165 முதல் 168 வரையிலும்,

தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர்.டி.பூபாலன், கெருகம்பாக்கம், தண்டலம் தரப்பாக்கம் ஊராட்சியில் 136 முதல் 164 வரையிலும் ஆகிய ஊராட்சிகளையும் மேற்பார்வையாக கலந்து கொண்டு நடைபெற உள்ள வாக்குச்சாவடி செயல்வீரர்கள் கூட்டம் இன்று 23/9/2023 மற்றும் 24.09.2023 ஆகிய நாட்களில் நடைபெற இருப்பதால் கழக நிர்வாகிகளோடு ஆலோசித்து சம்பந்தப்பட்ட பாகத்தில் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உடன் கழக தோழர்களுக்கு தகவல் தெரிவித்து சிறப்பான முறையில் கூட்டத்தினை நடத்திட வேண்டுமாயும் இதில் கழக செயலாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உடன் இருந்து ஒத்துழைப்பு நல்கி சிறப்பான முறையில் நடத்திட வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நடைபெறும் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையிலான குடியிருப்புகள் விற்பனை முகாம்களில் அண்ணா நகர் மற்றும் க.க.நகர் கோட்டங்களில் நடைபெறும் முகாம்களை திடீர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆலோசனை நடத்தினார். ஒதுக்கீடுதாரர்களுக்கு எந்தவித குறைகளும் ஏற்படாதவாறு முறையாக விற்பனை மேற்கொள்ள அறிவுறுத்தினார். அண்ணா நகர் கோட்ட செயற்பொறியாளர் சித்துராஜ், விற்பனை மற்றும் சேவை மேலாளர் ஜெயச்சந்திரன், க.க.நகர் கோட்ட செயற்பொறியாளர் முரளி, திருமழிசை துணைக்கோள் நகரம் கோட்ட செயற்பொறியாளர் கரிகாலன், க.க.நகர் கோட்ட உதவி செயற்பொறியாளர் பாண்டியராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### இந்த ஆண்டும் வெடி வெடிப்பதில்

# தீபாவளி பண்டிகைக்கு கட்டுபாடு!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

சென்னை,செப்.23-

தீபாவளி பண்டிகையன்று 2 மணி நேரம் மட்டும் பட்டாசு வெடிக்க அனுமதி வழங்கியுள்ளதாக உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

இந்த நிலையில், சர வெடி மற்றும் பேரியம் மூலப்பொருளில் தயாராகும் பட்டாசுகளுக்கு அனுமதி கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் சுற்றுச்சூழலைப் பாதிக்காத பட்டாசுகளை வெடிக்கலாம். அதுவும் வெறும் 2 மணி நேரம் மட்டும் பட்டாசு வெடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி கோரி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு தள்ளுபடி செய்தது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது.

இந்தாண்டு தீபாவளி பண்டிகை தினத்தன்றும், கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், பட்டாசுத் தொழிலாளர்கள் இடையே பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தி.மு.க. பவள விழா ஆண்டு - முப்பெரும் விழா!

# தாம்பரம் மாநகரில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - பேராசிரியர் சுப. வீரபாண்டியன் - ஷா நவாஸ் சிறப்புரை! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், செப்.23-

தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (23.09.23, வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் சண்முகம் சாலை பாரதி திடலில் தாம்பரம் மாநகர திமுக சார்பில் திமுக பவள விழா ஆண்டு முப்பெரும் விழாவை முன்னிட்டு மூன்று முத்தான தலைப்புகளில் எனது தலைமையில் (எஸ்.ஆர்.ராஜா எம்எல்.ஏ.), பகுதி கழக செயலாளர் டி. காமராஜ் வரவேற்று பேசுகிறார். எஸ்.இந்திரன், எஸ். சேகர், வெ.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, கி. வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் கழகம் ஒரு வானம் என்ற தலைப்பிலும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் குரு சிறு மற்றும் நடுத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சமூக நீதி கண்காணிப்பு குழு தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் அவர்கள் பெரியார் எனும் எரிமலை என்ற தலைப்பிலும், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் எம்எல்ஏ., அண்ணா எனும் அன்பு மழை என்ற தலைப்பிலும் உரையாற்ற உள்ளனர்.

காஞ்சி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, மாநகர பொருளாளர் வ.விஜயரங்கன், பி.சதாசிவம் இரா. சுரேஷ், ஆ.நடராஜன், ஏ. கே.கருணாகரன், தா. ஜெயக் குமார், இ.எஸ்.பெர்னாட், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ் மாறன், என்.நவீன், கா.தேவேந்திரன், மு.ரஞ்சன், ஆர்.எஸ்.ஷங்கர், எல். பிரபு, வி.ரவிச்சந்திரன், ரமணி, ஆதி மூலம், இ.மனோகரன், மலர் மு. கருணாநிதி, இரா.விஜயகுமார், தி.ச.நடராஜன், டி. கே.தாமஸ், டி.கே.கோட்டி கி. முத்துமாறன், ஜெ.சத்திய சீலன், டி.ஆர்.கோபி, வி. கார்த்திக், ச.ராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன், ச. பிரபு, ஜே.இன்சமாம், எஸ். கார்த்திக், பி.ஜோதி குமார், செ.சுரேஷ், லிங்கேஸ்வரி, பாபு, சசிகலா, கார்த்திக்.

நன்றி உரை பி.கே.ஏ. சத்திய பிரபு மற்றும் மாவட்ட மாநகர, பகுதி வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி 4 வது வார்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொதுமக்கள் சாலை வசதி தெரு மின்விளக்கு வேண்டி கோரிக்கை வைத்தனர். இதனை தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்பு கொண்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உடன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வக்கம்பட்டியில் புதிய முழுநேர நியாய விலைக் கடையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று முன்தினம் (21.09.2023) திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு குடிமைப் பொருட்களை வழங்கினார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.

ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை

## முதலிடத்துக்கு முன்னேறியது இந்தியா!

மொகாலி, செப்.23-

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி மொகாலியில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் கே.எல். ராகுல் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 276 ரன்னுக்கு ஆல் அவுட்டானது. சிறப்பாக ஆடிய டேவிட் வார்னர் அரை சதம் அடித்து 52 ரன்களில் அவுட் ஆனர். ஜோஷ் இங்கிலிஸ் 45 ரன்னும், ஸ்மித் 41 ரன்னும், லபுசேன் 39 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்திய அணியின் சார்பில் முகமது ஷமி 5 விக்கெட்டும், பும்ரா, அஷ்வின், ஜடேஜா தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

அடுத்து ஆடிய இந்திய அணி 48.4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 281 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், ஆஸ்திரேலியா உடனான வெற்றிக்கு பிறகு வெளியான ஐசிசி தரவரிசையில் இந்தியா முதலிடம் பிடித்து அசத்தியுள்ளது.

குன்றத்தூர் நகரக் கழகம் சார்பில்

# பாகம் வாரியாக (பூத்) செயல்வீரர்கள் கூட்டம்!

### நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 23-

குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகரக் கழகம் சார்பில் பாகம் வாரியாக (பூத்) செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளான தொ.மு.ச. பேரவை செயலாளர் இரா.பொன்ராம், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மாங்காடு எம்.அர்.சீனிவாசன் ஆகியோரை மேற்பார்வையாகக் கொண்டு நடைபெறுகிறது.

இன்று (23.9.2023 - சனிக்கிழமை) காலை 9.30 மணி - 180வது பாகம், காலை 10.30 மணி - 181 வது பாகம், காலை 11.30 மணி - 182வது பாகம், மாலை 4 மணி - 183வது பாகம், மாலை 5 மணி - 184வது பாகம் மாலை 6 மணி -185வது பாகம், 24.9.2023-ஞாயிறு காலை 9.30 மணி - 186 வது பாகம், காலை 10.30 மணி - 187வது பாகம், காலை 11.30 மணி - 188வது பாகம், மாலை 4 மணி -189வது பாகம், மாலை 5 மணி - 190வது பாகம், மாலை 6 மணி - 191வது பாகம், 30.9.2023- சனிக்கிழமை காலை 9.30 மணி - 192வது பாகம், காலை 10.30 மணி - 193வது பாகம், காலை 11.30 மணி - 194வது பாகம், மாலை 4 மணி - 195வது பாகம், மாலை 5 மணி - 196வது பாகம், மாலை 6 மணி - 197வது பாகம், 1.10.2023 - ஞாயிறு காலை 9.30 மணி - 198வது பாகம், காலை 10.30 மணி - 199வது பாகம், காலை 11.30 மணி - 200 வது பாகம், மாலை 4 மணி - 201வது பாகம், மாலை 5 மணி - 202வது பாகம், மாலை 6 மணி - 203வது பாகம், இரவு 7 மணி - 204வது பாகம் ஆகிய பாகங்களில் தொ.மு.ச. பேரவை செயலாளர் இரா.பொன்ராம் மேற்பார்வையாளராக இருந்து கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (23.9.2023 - சனிக்கிழமை) காலை 9.30 மணி-205வது பாகம், காலை 10.30 மணி - 206வது பாகம், காலை 11.30 மணி 207வது பாகம், மாலை 4.00 மணி - 208வது பாகம், மாலை 5 மணி - 209வது பாகம், மாலை 6 மணி - 210வது பாகம், 24.9.2023 -ஞாயிறு காலை 9.30 மணி - 211வது பாகம், காலை 10.30 மணி - 212வது பாகம், காலை 11.30 மணி - 213வது பாகம், மாலை 4 மணி - 214வது பாகம், மாலை 5 மணி 215வது பாகம், மாலை 6 மணி - 216வது பாகம், 30.9.2023 - சனிக்கிழமை, காலை 9.30 மணி -217வது பாகம், காலை 10.30 மணி 218வது பாகம், காலை 11.30 மணி -219வது பாகம், மாலை 4 மணி - 220வது பாகம், மாலை 5 மணி - 221வது பாகம் ஆகிய பாகங்களில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.சீனிவாசனை மேற்பார்வையாளராகக் கொண்டு கூட்டம் நடைபெறுகிறது.

எனவே வார்டுக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், பி.எல்.ஏ.2, கழக நிர்வாகிகளுடன் ஆலோசித்து சம்மந்தப்பட்ட பாகத்தில் முறையாக துண்டுப்பிரசுரங்கள் அச்சடித்து முன் கூட்டியே தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களுக்கும், கழகத் தோழர்களுக்கு தகவல் தெரிவித்து சிறப்பான முறையில் கூட்டங்களை நடத்திடுமாறு நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான முதற்கட்ட நேர்காணல்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மாணவர் அணியில் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணலை, அந்தந்த மாவட்டத்தில் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் நடத்தவுள்ளனர்.

மாவட்டக் கழக செயலாளர்களுடன் கலந்துப் பேசி முடிவெடுத்ததன் அடிப்படையில் கீழ்காணும் பட்டியல் படி நேர்காணல் நடைபெறவுள்ளது.

| நாள் | கழக மாவட்டம் | நேர்காணல் நடத்தும் மாநில நிர்வாகிகள் |
|---|---|---|
| 23.09.2023 | பெரம்பலூர் | இரா. ராஜீவ்காந்தி<br>பி.எம். ஆனந்த் |
| 25.09.2023 | மதுரை மாநகர் | சி. ஜெரால்டு |
| மற்றும் | மதுரை வடக்கு | ஜெ. வீரமணி |
| 26.09.2023 | மதுரை தெற்கு | |
| 26.09.2023 | சென்னை மேற்கு | மன்னை த. சோழராஜன் |
| 27.09.2023 | சென்னை தென்மேற்கு | பூர்ணசங்கீதா |
| 28.09.2023 | திருப்பத்தூர் | சேலம் ரா. தமிழரசன்<br>கா. அமுதரசன் |


நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, மாணவர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால், அது தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.9.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு
### செப்டம்பர் 23 (2020)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

“பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். ” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அண்ணாநகர் 101-வது வட்ட மாவட்டப் பிரதிநிதி ஜெ.வீரமணியின் தந்தை

## கே.ஜானகிராமன் 2-ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!



சென்னை, செப்.23-

அண்ணா நகர் வடக்குப் பகுதி 101-வது வட்டம், மாவட்டக் கழகப் பிரதிநிதி ஜெ.வீரமணியின் தந்தை கே.ஜானகிராமன் அவர்களின் 2-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி இன்று (23.9.2023) காலை அவரது இல்லத்தில் (அண்ணாநகர் கிழக்கு, 18-வது தெரு, ஜி- பிளாக் ஏ.ஏ. 11) நடைபெறுகின்றது.

நினைவில் வாழும் கே. ஜானகிராமன் அவர்கள் 73-வது வட்டம், வ.ஊ.சி. நகர் பகுதியில் டாக்டர் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தில் மன்றத் தலைவராகவும் செயல்பட்டு வந்துள்ளார். மேலும் 68-வது வட்டக் கழக அவைத்தலைவராகவும், பொருளாளராகவும் 25 ஆண்டுகள் பொறுப்பு வகித்து பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது 2-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு கே.ஜானகிராமன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை மாவட்டப் பிரதிநிதி ஜெ.வீரமணி வரவேற்கிறார்.

சேப்பாக்கம் - 115வது வட்டம் - முன்னாள் பகுதி பிரதிநிதி

## எட்டியப்பன் முதலாமாண்டு நினைவு நாள்!

### கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, செப்.23-

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 115வது வட்டம், ஆல்ஸ் கார்டன் முன்னாள் பகுதிப் பிரதிநிதி - மறைந்த எட்டியப்பன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (23.9.2023) மாலை எண். 32, சிவன் கோவில் தெரு, பனையத்தம்மன் கோயில் திருவேற்காடு எனும் முகவரியில் அனுசரிக்கப் படுகிறது.

இதில் கழக நிர்வாகிகள் உறவினர்கள் கலந்து கொண்டு அன்னாரது படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடாளுமன்ற தேர்தல் வரை திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிட

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தொடர் பொதுக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் - மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் –

தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமைமிகு சாதனையை படைத்து, ஈராண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் வருகிற 28.09.2023 முதல் 13.10.2023 வரை கீழ்க்கண்ட பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்காணும் விவரப்படி தொடர் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| **நாள் : 28.09.2023 – வியாழன் / நேரம் : 5 மணி** | |
| பல்லாவரம் வடக்கு பகுதி | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | கரூர் முரளி |
| **நாள் : 29.9.2023 – வெள்ளி / நேரம் : 5 மணி** | |
| பல்லாவரம் வடக்கு பகுதி | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | கரூர் முரளி |
| **நாள் : 30.9.2023 – சனி / நேரம் : 5 மணி** | |
| செங்கல்பட்டு நகரம் | குடியாத்தம் புவியரசி |
| திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| **நாள் : 1.10.2023 – ஞாயிறு / நேரம் : 5 மணி** | |
| திருக்கழுக்குன்றம் பேரூர் | தக்கோலம் தேவபாலன் |
| மாங்காடு நகரம் | போடி காமராஜ் |
| **நாள் : 2.10.2023 – திங்கள் / நேரம் : 5 மணி** | |
| பம்மல் தெற்கு பகுதி | ஈரோடு இறைவன் |
| திருப்போரூர் பேரூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| **நாள் : 3.10.2023 – செவ்வாய் / நேரம் : 5 மணி** | |
| ஆலந்தூர் தெற்கு பகுதி | குத்தாலம் அன்பழகன் |
| **நாள் : 4.10.2023 – புதன் / நேரம் : 5 மணி** | |
| ஆலந்தூர் வடக்கு பகுதி | சைதை சாதிக் |
| திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | ஆரணி மாலா |
| **நாள் : 5.10.2023 – வியாழன் / நேரம் : 5 மணி** | |
| மறைமலை நகர் நகரம் | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ. |
| பல்லாவரம் தெற்கு பகுதி | கரூர் முரளி |
| **நாள் : 6.10.2023 – வெள்ளி / நேரம் : 5 மணி** | |
| குன்றத்தூர் நகரம் | சைதை சாதிக் |
| திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | சேப்பாக்கம் பிரபாகரன் |
| **நாள் : 7.10.2023 – சனி / நேரம் : 5 மணி** | |
| கண்டோன்மெண்ட் நகரம் | முனைவர் சபாபதி மோகன் |
| புனிததோமையர் மலை வடக்கு ஒன்றியம் | சேலம் சுஜாதா |
| **நாள் : 8.10.2023 – ஞாயிறு / நேரம் : 5 மணி** | |
| தாம்பரம் கிழக்கு பகுதி | குடியாத்தம் புவியரசி |
| **நாள் : 9.10.2023 – திங்கள் / நேரம் : 5 மணி** | |
| செம்பாக்கம் வடக்கு பகுதி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம் | கந்திலி கரிகாலன் |
| **நாள் : 10.10.2023 – செவ்வாய் / நேரம் : 5 மணி** | |
| பம்மல் வடக்கு பகுதி | முனைவர் சபாபதி மோகன் |
| செம்பாக்கம் தெற்கு பகுதி | ஆரணி மாலா |
| **நாள் : 11.10.2023 – புதன் / நேரம் : 5 மணி** | |
| திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | சேலம் சுஜாதா |
| பெருங்களத்தூர் தெற்கு பகுதி | சைதை சாதிக் |
| **நாள் : 12.10.2023 – வியாழன் / நேரம் : 5 மணி** | |
| குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | குத்தாலம் அன்பழகன் |
| திருப்பெரும்புதூர் பேரூர் | நாகம்மை கருப்பையா |
| **நாள் : 13.10.2023 – வெள்ளி / நேரம் : 5 மணி** | |
| மாமல்லபுரம் நகரம் | ஆலந்தூர் மலர்மன்னன் |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | போடி காமராஜ் ஒப்பிலாமணி |

அறிவிக்கப்பட்டுள்ள இந்த பொதுக்கூட்டங்களை, அந்தந்த பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, உள்ளூரில் உள்ள கழகப் பேச்சாளர்களையும் இணைத்து, அழைப்பிதழில் கழக நிர்வாகிகளின் பெயர்களை விடுபடாமல் முறையாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு,

அந்தந்த மாநகர பகுதி – ஒன்றிய – நகரங்களில் அடங்கிய நகர – பேரூர் – வட்டக் கழக நிர்வாகிகள் – இளைஞர் அணி – மாணவர் அணி – மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் – வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் – உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,

எந்த நோக்கத்திற்காக இந்த தொடர் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை – எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்திட, இப்பொதுக்கூட்டங்களை ஆடம்பரமின்றி – மிகவும் எளிமையான முறையில் – எழுச்சியுடன் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்,**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு கீதா முரளி எம்.சி. தலைமையில் 171வது வார்டு பள்ளி மாணவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசுகளை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். பகுதிச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகித்தார். வட்டச் செயலாளர்கள் பா.பொன்னுசாமி, துரை பார்த்திபன், மா.பா.அன்பு ஆகியோர் வரவேற்புரையாற்றினர். உடன் அ.ரேவதி எம்.சி., பானு சலீம், கே.மலர், பி.எல்.தாஸ், ஆர்.பாலு, ஆர்.கதிரவன், ஆர்.சக்கரவர்த்தி, டி.ஆர்.ரமேஷ், ஆர்.ராமகிருஷ்ணன், ஆர்.சிவன், மா.பா.தாமு, டி.கண்ணன், ரேவதி பொன்னுசாமி, தீபா மூர்த்தி, எஸ்.குமார், காசி, பாண்டியன், தென்றல் விஜய், கே.முரளி, கே.சதீஷ்குமார், டி.ஸ்ரீதர், பஞ்சர் கே. முருகன், மூர்த்தி, வீரப்பன், அன்னபூரணி மோகன், கலைச்செல்வி, சுசீலா துரைராஜ், கிரிஜா, மரியா பிலோமினா, மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மகளிர் அணியினர், அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.






கலைஞர் 100
1924 - 2023

நாள் : 23.09.2023
சனிக்கிழமை
நேரம் : காலை
9.00 மணி

எழும்பூர் தெற்கு பகுதி
108வது வட்டத்தில் உள்ள சேத்துப்பட்டு
எம்.எஸ்.நகரில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய
குடியிருப்புகள் கட்டும் பணியின் அடிக்கல்
நாட்டும் விழா மற்றும் 77வது வட்டத்தில்
கே.பி.பூங்கா குடியிருப்பில் உள்ள
விளையாட்டு மைதானத்தின் திறப்பு
விழா ஆகிய நிகழ்ச்சிகளுக்கு
வருகை தரும்

எங்களின்

# இளம் தலைவரே

வருக! வருக!

மாண்புமிகு.
## பி.கே.சேகர்பாபு
அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
தலைவர் – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
செயலாளர் – சென்னை கிழக்கு மாவட்டம்

திரு. **தயாநிதிமாறன்** MP
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச்செயலாளர்

**சொ.வேலு** MC
எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்

**வி.சுதாகர்**
எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

வட்ட கழக செயலாளர்கள்
**எல்.சுந்தரராஜன்** MC
**வான்மதிகதிரவன் இ.மொய்தீன்**
டால்பின் **அரி வி.விஜயகுமார் ஆர்.பாபு சி.சேகர்**
**ஆர்.எம்.ரங்கநாதன் சு.மனோகர்**
**ந.பாலு தி.தயாளன் வி.அபாய்**

வரவேற்று மகிழும்

## K.S.இரவிச்சந்திரன் B.Sc.,B.L.,EX.MLA
கழக சட்டத்துறை இணைச் செயலாளர் – தலைவர் சென்னை மாவட்ட அறங்காவலர் குழு

# உடன்பிறப்பே... 24

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த கே.கே.நீலமேகம் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# கே.கே.நீலமேகம் : ‘குடந்தை பெரியார்’!



ஓவியம் : ரவி பேலட்

*1949*-ஆம் ஆண்டு, செப்டம்பர் 17, காலை 7 மணி. சென்னை, ஜார்ஜ் டவுன், பவழக்காரத் தெரு இலக்கம் எண் 7. நீதிக்கட்சி பிரமுகர் சண்முகம் அவர்களின் வீடு. அந்த வீட்டின் மாடியில், திராவிடர் கழகத்தில் இருந்து முரண்பட்டு வெளியேறியவர்கள் கூடிப் பேச ஒன்று திரண்டிருந்தனர். திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தை அதன் துணைத் தலைவர் கே.கே. நீலமேகம் கூட்டினார்.

திரண்டிருந்தவர்களில் பெரும்பான்மையோர் 25 வயதையொட்டிய இளைஞர்கள். அவர்களில் ஒருவருக்கு மட்டும் 40 வயதுக்கும் மேல். அந்த வயதிலும், 25 வயது இளைஞர்களின் உள்ளக் கிடக்கைகளோடு பொருந்திப் போகிறவராக, அவர்களுக்கு மூத்தவராக இருந்தார் கே.கே.நீலமேகம். அப்போது எடுக்கப்பட்ட முடிவின்படி, திராவிடர் கழகத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற இயக்கம் பிறந்து, தமிழ்நாட்டின் விடிவெள்ளியாக மாற்றம் கண்டது என்பது வரலாறு.

அந்தக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணாவை விடவும் வயதில் மூத்தவராக இருந்தார் நீலமேகம். திராவிடர் கழகத்தில் அண்ணா பொதுச்செயலாளராக இருக்க, நீலமேகம் பெரியாரின் நம்பிக்கைக்குரிய வலதுகரமாக இருந்தார்.

## பெரியாரின் குரலானவர்

அன்றைய தஞ்சை ஜில்லாவின் கும்பகோணத்தில் செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவர் நீலமேகம். நீதிக்கட்சி காலந்தொட்டுப் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். தஞ்சை வட்டாரத்தில் பெரியாரின் குரலாக ஒலித்ததால், அவரை ‘குடந்தை பெரியார்’ என அடைமொழியிட்டு அழைப்பார்கள். நீதிக்கட்சி, திராவிடர் கழகமானபோது நிர்வாகக் கமிட்டியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.

1945-ஆம் ஆண்டு, திராவிடர் கழகத்தின் முதல் மாநில மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் நீலமேகம். அப்போது, திராவிடர் கழகத்தில் இருந்து இளைஞர்கள் முரண்பட்ட வேளையில், அண்ணாவின் அடிச்சுவட்டிலேயே தம்முடைய அரசியல் பயணத்தை அமைத்துக் கொண்டார் நீலமேகம்.

அண்ணா தமக்கு இளையவராக இருந்தபோதிலும், அவர் அண்ணாவைப் பெயர் சொல்லி உரிமையுடனும் மரியாதையுடனும் விளிப்பவராக நீலமேகம் இருந்தார். அதன் பொருள் அண்ணாவின் தலைமையை மதித்தார் என்பதுதான். கட்சியின் முதல் அமைப்புக் குழுவில் இருந்து அதன் அடுத்த கட்டத்தை நகர்த்தியவர்களில் ஒருவர் கே.கே.என்.

## நெஞ்சம் உருக்கிய உரை

வயதில் மூத்தவராக இருந்தாலும், இயக்கத்தின் இளம் தலைவர்களையும், இளம் தொண்டர்களையும் மதித்து அவர்களுக்கு அரசியல் எழுச்சியூட்டி உணர்ச்சிப் பிழம்புகளாக உருவெடுத்திட தூண்டுகோலாகச் செயல்பட்டவர் நீலமேகம்.

கே.கே.என். மேடைப் பேச்சிலும் மக்களைக் கட்டிப்போடக் கூடியவர். சென்னை ராபின்சன் பூங்காவில் கட்சி அறிவிப்புப் பொதுக்கூட்டத்தின் போது கடும் மழை. அண்ணா உரை நிகழ்த்த வேண்டும், ஆனால், மழை காரணமாகக் கூட்டம் கலையத் தொடங்கியபோது, தனது உணர்ச்சிமிக்கப் பேச்சால் கூட்டத்தைக் கட்டிப்போட்டார் நீலமேகம்.

**ஓய்வில்லா அலைச்சல் காரணமாகப் ‘புளூரசி’ எனும் நோயால் பாதிக்கப்பட்டு, ஆறு மாதம் படுத்தப் படுக்கையாகி விட்டார் கலைஞர்.**

“கண்ணீர் மழையே பொழிந்து கேட்போரின் நெஞ்சம் நெக்குருகப் பேசினார். அந்த உரையைக் கேட்டவர்கள் மழையில் நனைந்தாலும் பரவாயில்லை என்று மறுபடியும் வந்தமர்ந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்” என அந்த உரை குறித்து **‘நெஞ்சுக்கு நீதி’**யில் குறிப்பிட்டுள்ளார் கலைஞர்.

## இளையோருக்குத் தலைமை...

1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும், கழகம் தன்னுடைய முதல் மாநில மாநாட்டை 1951-ஆம் ஆண்டுதான் நடத்தியது. அந்த ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னையில் மிகப்பெரிய எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டின் திறப்பாளர் கே.கே. நீலமேகம்தான். கழகத்தினர் அனைவரும் ஒருமனதாக அவருக்கு அந்த மரியாதையை அளித்தனர்.

சென்னை அறிவகத்திலிருந்து புறப்பட்ட மாபெரும் ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றனர் நம் தலைவர்கள். எஸ்.ஐ.ஏ.ஏ மாநாட்டுத் திடலில், கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்தார் மாநாட்டுத் தலைவர் அண்ணா.

மறுநாள் கே.கே.நீலமேகம் மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய பின்னரே மாநாட்டைத் தலைமையேற்று வழி நடத்தினார் அண்ணா. வயதில் இளையவரின் தலைமையை ஏற்றவர் கே.கே.என். ஆனால், அவரே இளையோரை வழி நடத்துகிறார் என்பதன் அடையாளமாகப் பறைசாற்றப்பட்ட நிகழ்வு அது.

## அனுபவத்துக்குப் பிறகு தேர்தல்

1957-இல் திருச்சி தந்த திருப்புமுனையின்போது, இயக்கத்தின் அடுத்த கட்டம் குறித்து ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால், அதற்கு முன் நடந்த வாதங்களின்போது, கே.கே.என். தனது வயதுக்கே உரிய அனுபவத்துடன் இளையவர்களிடம் தனது கருத்துகளை எடுத்து வைத்தார்.

கட்சி தொடங்கிய குறுகிய காலத்துக்குள், தேர்தல் வழியைப் பின்பற்ற வேண்டாம். எந்தத் தவறும் செய்யாதபோதும் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. கழகம் அப்படியான நிலைக்குச் செல்லக்கூடாது. இன்னும் சில கால அனுபவத்துக்குப் பின்னர் களம் செல்லலாம் என்பது அவர் வாதமாக இருந்தது. எனினும், கட்சிப் பெரும்பான்மை கருத்துக்குக் கே.கே.என். உடன்பட்டார்.

எதையும் அமைதியாகச் சிந்திக்கும் அவர், கட்சியின் எதிர்காலம், கழகத்தின் இருப்பு, கடமை ஆகியவையே அவரின் வாதம் என்பதை கழகத்தினர் அறிவர்.

## தஞ்சை மாவட்ட அசைவு

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கட்சியின் பணிகள் அவரின்றி ஓர் அணுவும் அசையாது. 1951-ஆம் ஆண்டு அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி, திருவையாறுக்கு வருகை தர இருந்தார். அவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டும் எனக் கலைஞர் திட்டமிட்டபோது, “தஞ்சை மாவட்டச் செயலாளரான நீலமேகத்தைக் கலந்து கொண்டு முடிவு செய்” என அண்ணா அனுப்பி வைத்தார். அவர் சம்மதம் கொடுத்தால்தான், அண்ணா போராட்டத்துக்கு அனுமதி அளிப்பார். இது கழகத்தின் கட்டுப்பாடு என்பதைக் கலைஞரும் அறிவார்.

“தஞ்சை மாவட்டத்தில் போதிய அளவுக்கு கழகம் வளரவில்லை என்பதால், கருப்புக் கொடி போராட்டம் வெற்றிகரமாக அமையாது. எனவே, கட்சியினரை ஒருங்கிணைக்கத் தொடர்ச்சியாகக் கூட்டங்களை நடத்தி எழுச்சி ஏற்படுத்துவோம். தொண்டர்களைத் திரட்டலாம்” என ஆலோசனை வழங்கியதுடன், தொடர்ச்சியாக மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார்.

கலைஞர் தொடர்ச்சியாக 26 நாட்கள் இரவு பகல் பாராமல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, ஆதரவு திரட்டி தஞ்சாவூரை கலங்கச் செய்தார். போராட்டம் வெற்றிகரமாக நடந்ததில், மாவட்டச் செயலாளராக இருந்த நீலமேகத்துக்கு அளவில்லா மகிழ்ச்சி. ஆனால், ஓய்வில்லா அலைச்சல் காரணமாகப் ‘புளூரசி’ எனும் நோயால் பாதிக்கப்பட்டு, ஆறு மாதம் படுத்தப் படுக்கையாகிவிட்டார் கலைஞர்.

## கழகத்தின் முதல் பொருளாளர்

பெரியாரின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர், கே.கே.என். எந்த அளவுக்கு எனில், பெரியார் தனக்கு வரும் நிதிகளை எந்தக் கணக்கும் இல்லாமல் கொடுத்து வைக்கும் அளவுக்கு நம்பிக்கைக்கு உரியவர் என பேராசிரியர் நன்னன் குறிப்பிடுகிறார்.

பெரியாரை விட்டு விலக முடிவு செய்த பின்னர், ஒரு நாள் மாலை நேரம், நீலமேகம் பெரியாரை சந்திக்கச் செல்கிறார். தன்னிடம் கைவசம் இருந்த இருப்புத் தொகை, கணக்குகள் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு வந்துள்ளார். அந்த அளவுக்குப் பொதுநிதியைக் கையாள்வதில் நேர்மையாளர் என்பது பெரியார் காட்டும் அடையாளமாகப் பார்க்கலாம். அதனால்தான், கழகத்தின் முதல் பொருளாளராக உருவானார்.

## மனதில் நிறைந்தவர்

தஞ்சை மாவட்ட 3-வது மாநாடு திருவாரூரில் நடந்தபோது, மாநாட்டுச் செலவுகள்போக 20 ஆயிரம் ரூபாய் மிச்சத் தொகையாக அறிவிக்கப்பட்டது. மாவட்ட மாநாடுகளில் முதல் முறையாக அவ்வளவு பெரிய தொகை மிச்சம் ஆனது அப்போதுதான். அது கலைஞரின் ஆற்றலுக்குக் கட்டியம் கூறியது என்றாலும், காரணமாக இருந்தவர் கே.கே.என்.

1965-ஆம் ஆண்டு, கழகத்தின் கொந்தளிப்பான காலத்தில் தன் இளவல்களை விட்டுப் பிரிந்தார் கே.கே.என். கழகத்தினர் மொத்தமும் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த விரைந்தனர். **“தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த தங்கம் - தன்மான இயக்கத்தின் தலைதாழாச் சிங்கம் - குடந்தை பெரியார் நீலமேகம் அவர்கள் மறையவில்லை, மனதில் நிறைந்துவிட்டார்”** என ‘முரசொலி’ தலையங்கத்தில் எழுதினார் கலைஞர்.

அண்ணா ‘பெரியவர்’ என்றழைத்த கழகத்தின் பெரியார் கே.கே.என். புகழ் என்றென்றும் கழகக் கொடியாக உயரப் பறக்கும்.

...துடிக்கும்

## சனாதனத்தின் கோர முகம்!



புதிய நாடாளுமன்றத்தில் நடிகை தமன்னாவுக்கு வரவேற்பளிக்கிறார்கள். கங்கனா ரனாவத்துக்கு வரவேற்பளிக்கிறார்கள். இன்னும் பல நடிகைகளை அழைத்துச்சென்று மரியாதை செய்கிறார்கள். அந்த மரியாதை, இந்தியாவின் முதல் குடிமகளான திரௌபதி முர்மு அவர்களுக்கு இல்லை. ஏனென்றால், இவர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இந்த அதிகார மட்டத்தால் புறக்கணிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டுள்ளார். இங்கே அரசியலமைப்புச் சட்டத்தைக் குப்பையில் போட்டுவிட்டு, சனாதனத்தைத் தூக்கி வைக்கிறார்கள். இதைத்தான் ராகுல்காந்தி வேதனையோடு கேள்வியாக்குகிறார். மௌனச்சாமி தரப்பில் எவரும் பதிலளிக்கவில்லை.

**-பத்திரிகையாளர் டி.எஸ்.கவுதமன் முகநூல் பதிவு**

## :ப்ளாஷ்பேக்



### இடைத்தேர்தல் வெற்றி!

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் நண்பரும், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் தந்தையாருமான பொய்யாமொழி அவர்களின் மறைவால் 1999-2000-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி-2 தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது. அந்த இடைத்தேர்தலில் தளபதி அவர்கள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார். அதில் அன்பில் பொய்யாமொழி அவர்களின் இளைய சகோதரர் அன்பில் பெரியசாமி அவர்கள் வெற்றிபெற்றார். அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில், திருச்சி ரோஷன் மகாலில் தளபதி தலைமையில் நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெற்றது. அப்போது அவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



இராஜ்குமார்

**-இரா.இராஜ்குமார்,**
**தொகுதி ஒருங்கிணைப்பாளர்,**
**தகவல் தொழில்நுட்ப அணி, மணப்பாறை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நில உச்சவரம்புச் சட்டம்!

**1970-ஆம் ஆண்டு, மார்ச் 31-ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில், நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். 1961-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தில், 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு அதிகபட்சமாக 30 ஏக்கர் உச்சவரம்பு என நிர்ணயிக்கப்பட்டது. அந்தச் சட்டம் அமலில் இருந்தும், நில உறவு முறையில் ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்தன. அதையடுத்து 30 ஏக்கரில் இருந்து 15 ஏக்கராக குறைத்து சட்டம் கொண்டு வந்தார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 249




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


செந்தமிழர் ஆட்சி நூறாண்டு தொடரட்டும்...
தாம்பரம்
மாநகர தி.மு.க. சார்பில்
தி.மு.க. பவள விழா ஆண்டு
தி.மு.க. முப்பெரும் விழா
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 23 – 9 – 2023, சனிக்கிழமை, மாலை 6 மணி
இடம் : சண்முகம் சாலை, மேற்கு தாம்பரம்
முப்பெரும் தலைப்புகளில் எழுச்சியுரை!
கழகம் ஒரு வானம்!
திருமிகு டி.ஆர்.பாலு B.Sc., M.P.
கழகப் பொருளாளர் / கழக நாடாளுமன்ற குழுத்தலைவர்
மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
தா.மோ.அன்பரசன்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
பெரியார் என்னும் எரிமலை!
பேராசிரியர் சுப.வீரபாண்டியன்
திராவிடர் இயக்க தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர்
சமூகநீதி கண்காணிப்பு குழுத்தலைவர்
அண்ணா என்னும் அன்பு மழை!
ஆளூர் ஷா நவாஸ் M.L.A.
துணைப் பொதுச்செயலாளர் – விடுதலை சிறுத்தைகள் கட்சி
மற்றும் கழக முன்னணியினர் கலந்துக்கொண்டு
சிறப்பிக்க உள்ளனர்... அனைவரும் வாரீர்... வாரீர்...
அன்புடன் வரவேற்கும்... S.R.ராஜா M.L.A.
மாநகரக் கழகச் செயலாளர் – தாம்பரம் சட்டமன்றத் தொகுதி
தாம்பரம் மாநகர தி.மு.க.


கலைஞர் 100
1924 – 2023
திரைவானின் விடிவெள்ளி!
திராவிட தமிழ்ப்பள்ளி!!
கலைஞர் 100 – 37
நாள் : 23.09.2023 சனிக்கிழமை மாலை 6.00 மணி
இடம் : ஜெயின் பள்ளி வளாகம், பெரவள்ளூர்.
தலைமை கே.சந்துரு B.E.,B.L.,
கழக சட்டத்துறை துணை செயலாளர் – தலைமை செயற்குழு உறுப்பினர்
முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி
சரிதாமகேஷ்குமார் எம்.சி தேவஜவகர்
சி.மகேஷ்குமார் எஸ்.பன்னீர்செல்வம்
எஸ்.தனசேகர் துரைகண்ணன்
எம்.அசோக்குமார் ஆர்.எஸ்.சித்திக்
போற்றுவோர்
இளையதிலகம் பிரபு
திரைப்பட நடிகர்
சொல்வல்லார் நந்தலாலா
மேயர் பிரியாராஜன்
என்.ஆர்.இளங்கோ எம்.பி கலாநிதிவீராசாமி எம்.பி
இரா.கிரிராஜன் எம்.பி ப.ரங்கநாதன் மு.எம்.எல்.ஏ
நன்றியுரை கே.ஜார்ஜ்குமார் 67 அ வட்ட கழக செயலாளர்
கொளத்தூர் கிழக்கு, மேற்கு பகுதி ▪ சென்னை கிழக்கு மாவட்டம்
Star Digital
044 - 43 55 48 47



நாள்: 23.09.2023 சனிக்கிழமை
காலை 10.00 மணி
இடம்: கோட்டூர்புரம் திட்ட பகுதி
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்
கோட்டூர்புரம் திட்ட பகுதியில் ரூ.307.24 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1800 வீடுகளுக்கான
அடிக்கல் நாட்டுவிழாவிற்கு
வருகைதரும்
வரலாற்று கழகத்தின் இளைஞரணிச் செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
வேலூர்
கிருஷ்ணகிரி
ஈரோடு
நீலகிரி
கோயம்புத்தூர்
திருப்பூர்
தேனி
RAM DESIGNS ©9884593766
மா.சுப்பிரமணியன் B.A., LLB.,
சென்னை தெற்கு மாவட்ட செயலாளர்
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
தா.மோ.அன்பரசன்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர்
மாண்புமிகு குறு–சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார் MC
துணை மேயர்
பெருநகர சென்னை மாநகராட்சி
AMV பிரபாகர்ராஜா MLA
சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
இரா.துரைராஜ் MC
சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர்
13 வது மண்டலக்குழுத் தலைவர்
எம்.கிருஷ்ணமூர்த்தி MC
சைதை மேற்கு பகுதி கழக செயலாளர்
10 வது மண்டலக்குழுத் தலைவர்
கா.மணி 170 வது வட்ட செயலாளர்
கோ.சண்முகம் 170 வது (அ) வட்ட செயலாளர்
மாவட்ட துணை அமைப்பாளர்கள் :
எம்.விநாயகமூர்த்தி ▪ ச.சங்கர்கணேஷ் ▪ ஆர்.கிருஷ்ணகுமார்
ஜெ.இ.எழில் பாண்டியன் ▪ கா.வீ.தியாகராஜன் ▪ செ.ரவி
வரவேற்று மகிழும்
கோட்டூர் S.பிரகாஷ் B.E., M.B.A., LLB.,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
சென்னை தெற்கு மாவட்டம் தி.மு.க.இளைஞர் அணி


சைதை தொகுதியில்
தொடரும் சாதனைகளின்
தொடர்ச்சியாக...
பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம்-13 வார்டு-170 கோட்டூர்புரம் திட்ட பகுதி சித்ராநகர் அருகில்
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்
ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள
1800 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!
வரவேற்புரை:
இரா.துரைராஜ் MC
சைதை கிழக்கு பகுதி செயலாளர் - 13 வது மண்டலக்குழுத் தலைவர்
எம்.கிருஷ்ணமூர்த்தி MC
சைதை மேற்கு பகுதி செயலாளர் - 10வது மண்டலக்குழு தலைவர்
தலைமை:
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,LLB.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
முன்னிலை:
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
விழாசிறக்க வருகை தரும்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
அவர்களே வருக! வருக!!
முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார் MC
துணை மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி
எஸ்.குணசேகரன் Ex.MC
மாவட்ட அவைத் தலைவர்
கோட்டூர் கோ.சண்முகம்
செயலாளர் - 170(அ) வட்ட தி.மு.க
கோட்டூர்புரம் க.மணி
செயலாளர் - 170 வது வட்ட தி.மு.க
நாள்: 23.09.2023 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: கோட்டூர்புரம் திட்ட பகுதி
Santhosh Design 99401 80492
அன்புடன் வரவேற்கும்
கோட்டூர் என்.பாபு
மாவட்ட பிரதிநிதி
மு.மகேஷ் லாரன்ஸ்
மாவட்ட பிரதிநிதி
வழக்கறிஞர் கொ.முத்துசாமி
பகுதி வழக்கறிஞர் துணை அமைப்பாளர்
ஜெ.கௌசல்யா
மகளிர் தொண்டரணி பகுதி அமைப்பாளர்


கலைஞர்
100
1924 - 2023
எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்
இ.பரந்தாமன்
தொகுதி மேம்பாட்டு நிதியில்
கே.பி.பார்க் பகுதியில்
உடற்பயிற்சிக்கூடம்,
16 பள்ளிகளில் அறிவுத்திறன்
வகுப்பு (Smart Class)
மாநகராட்சி விளையாட்டுத் திடல்
ஆகியவற்றை திறந்து வைத்தல் !
சேத்துப்பட்டு, எம்.எஸ் நகரில்
நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
சார்பில் அடுக்குமாடி குடியிருப்பு
கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டல் !
என பல்வேறு திட்டப்பணிகள் குறித்த
நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர்
இளந்தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும்
சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு பி.கே.சேகர்பாபு
இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும்
பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம் அமைச்சர்
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மற்றும்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியம் அமைச்சர்
திருமிகு தயாநிதிமாறன்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர்,
மண்டல குழு தலைவர்கள், எழும்பூர் தொகுதி உள்ளாட்சி
பிரதிநிதிகள் மற்றும் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள்,
பகுதி கழக - வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,
கழக முன்னோடிகள் ஆகியோரை
வருக ! வருக ! என வரவேற்கிறோம்.
ஜெ.விஜயகுமார், ஆர்.புருசோத்தமன்
புரசை S.குமார், ந.கலையரசன்
மு.கமலகண்ணன், வெ.மருதன்
மா.காந்தி, U.விஜயபோஸ், C.ரமேஷ்


கலைஞர்
100
1924 - 2023
எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்
இ.பரந்தாமன்
தொகுதி மேம்பாட்டு நிதியில்
கே.பி.பார்க் பகுதியில்
உடற்பயிற்சிக்கூடம்,
16 பள்ளிகளில் அறிவுத்திறன்
வகுப்பு (Smart Class)
மாநகராட்சி விளையாட்டுத் திடல்
ஆகியவற்றை திறந்து வைத்தல் !
சேத்துப்பட்டு, எம்.எஸ் நகரில்
நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
சார்பில் அடுக்குமாடி குடியிருப்பு
கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டல் !
என பல்வேறு திட்டப்பணிகள் குறித்த
நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர்
இளந்தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும்
சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு பி.கே.சேகர்பாபு
இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும்
பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம் அமைச்சர்
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மற்றும்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியம் அமைச்சர்
திருமிகு தயாநிதிமாறன்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர்,
மண்டல குழு தலைவர்கள், எழும்பூர் தொகுதி உள்ளாட்சி
பிரதிநிதிகள் மற்றும் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள்,
பகுதி கழக - வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,
கழக முன்னோடிகள் ஆகியோரை
வருக ! வருக ! என வரவேற்கிறோம்.
ரப்பீக், கி.புஷ்பராஜ், N.இளஞ்செழியன், K.சீனிவாசன்
இரா.வெற்றிவேல், ஜெ.சிலம்பரசன், நேரு பிரபாகரன்
பு.சதிஷ்குமார், சந்தோஷ்குமார், சுகுமாரன்
சி.குணசேகரன், ப.பன்னீர்செல்வம், சு.பிரம்மதேவன்
மா.கார்த்திகேயன், அன்புமணி பாலாஜி, ஆர்.தர்மதுரை
R.ஆரோக்கியம், M.கலா, ஹசினா, கவிதா



கலைஞர் 100 1924 - 2023
நாள் : 23.09.2023 சனிக்கிழமை
நேரம் : காலை 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை.
இடம் : ஜி.ஆர்.டி.பொறியியல் கல்லூரி, திருத்தணி.
மாபெரும் தனியார் துறை
வேலைவாய்ப்பு முகாம்
முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களின் ஆணைக்கிணங்க
துவக்கி வைப்பவர்கள்
மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி (ம) துணி நூல்துறை அமைச்சர்
இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் MP.,
மேனாள் மத்திய அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
அன்புடன்...
திருத்தணி எஸ்.சந்திரன் B.A., LLB., MLA.,
மாவட்ட கழக செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.
SS Digital 96 299 326 49




உடன்பிறப்பே!
எங்கள் உயிர்மூச்சு!
சென்னை தெற்கு மாவட்ட
தி.மு.க. பொறியாளர் அணி சார்பில்
நற்றமிழ் நாயகரைப் போற்றும்
சொற்கலைத் திருவிழா
நாள் : 23 - 9 - 2023, சனிக்கிழமை, மாலை 5 மணி
இடம் : வெல்கம் பேலஸ், முகப்பேர் ரோடு, சென்னை - 37.
கலைஞர் 100 1924 - 2023
"நகைச்சுவை நடிகர்"
மதன்பாப்
குழுவினரின்
கொஞ்சம் பாட்டு..
கொஞ்சம் நகைச்சுவை..
நெஞ்சம் நிறை இசை..
நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்கள்
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,L.L.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
திருமிகு. டி.ஆர்.பாலு B.Sc., M.P.
கழகப் பொருளாளர் / கழக நாடாளுமன்ற குழுத் தலைவர்
காரம்பாக்கம் க.கணபதி M.L.A.
மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் / மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவ பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்
நொளம்பூர் வே.ராஜன் M.A.,
பகுதி கழக செயலாளர், மதுரவாயல் வடக்கு பகுதி தி.மு.க.
11-வது மண்டல குழுத்தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
அன்புடன் வரவேற்கும்... கே.குமரேசன் D.E.C.E., மாவட்ட பொறியாளர் அமைப்பாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி